Registered No. M-4483

Madras War Review { TAMIL 25-2-1944

யுத்த சந்திகை

மலர் IV 1944-ம் வருஷம் பிப்ரவரிமீ 25உ வெள்ளிக்கிழமை இதழ் 25

SECRETARIAT LIBRARY 1946 MADRAS GOVERNMENT

துக்கப்படவோ சந்தோஷப்படவோ நேரமில்லை

மிஸ்டர் சர்ச்சில்.

துக்கப்படவோ சந்தோஷப்படவோ இதுவல்ல நேரம். ஆயத்தம், முயற்சி, மன உறுதி ஆகியவற்றைச் செய்து கொள்ள வேண்டிய காலந் தான் இது. யுத்தம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பிய யுத்தம் விரைவில் முடிந்துவிடும் என்னும் எண்ணம் எனக்குக் கிடையாது. அல்லது ஹிட்லர் தோற்று விடத்தக்க நிலைமையி லிருக்கிறார் என்றும் நான் கருதவில்லை. 1944-ம் வருஷத்தில் ஐரோப்பிய யுத்தம் முடிந்து விடு மென்று நான் ஒருவருக்கும் உறுதி கூறியது மில்லை; எதிர் பார்க்கவு மில்லை; முடியாது என்றும் நான் உறுதி கூறியது மில்லை.

கிழக்குப் போர் முனையில் நமது சோவியத் தோழர்களின் தலை சிறந்த வெற்றிகளின் பயனாக, எதிரிகளுக்கு ஏராளமான நஷ்டம். எதிரியின் படையைச் சேர்ந்த பல டிவிஷன்கள் இத்தாலியிலும் யுகோஸ்லோவியாவிலும் இருக்கின்றன அன்றியும் பிரான்சு முதலிய நாடுகளில் தமது எதிரிகள் எங்கே படை எடுத்து விடுவார்களோ என்னும் அச்சங் காரணமாக, அங்கேயும் பெரும் படைகளை வைத்திருக்கிறார்கள். ஜெர்மன் படைகள் இப்படி சிதறி யிருப்பதனால், சோவியத் படைகள் இந்த வெற்றிகள் பெற உதவுகிறது.

அல்லாமலும், ஜெர்மனியை ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் வெடி குண்டுகளைக் கொண்டு தாக்குவதன் பயனாக, 30 லட்சம் ஜெர்மன் போர் வீரர்கள் இந்தத் துறையில் ஈடு படவேண்டி யிருக்கிறது. இத்துடன் ஜெர்மன் போர் விமானங்கள் பிரிட்டனையும் அமெரிக்காவையும் தாக்கி, அங்கே போர் முனைகளை உண்டாக்குகிறார்கள். இவற்றிற்கு ஜெர்மன் படையினரில் ஐந்தில் நான்கு பங்குப் பேர்களை, அதற்கும் அதிகமானவர்களையும் கூடக் கொண்டு போயிருக்கிறார்களென்று நம்புகிறேன். இதுவும் சோவியத் யூனியனுக்கு உதவியா யிருந்தது. நான் இப்படிக் கூறுவது அவசியம். ஏனென்றால், நம் மேல் நாட்டுத் தோழரிடம் அப்போது தான் நாம் நேர்மையாக நடந்து கொண்டவர்களாவோம்.

ரஷ்யர்களுடைய போர்ப் புகழ் இதனால் எந்த வகையிலும் களங்கப்படாது.

—மிஸ்டர் சர்ச்சில், *பிப்பிரவரி மாதம் 22-ம் தேதி காமன்ஸ் சபையில் யுத்தத்தைக் குறித்து செய்த பிரசங்கம்.*

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம்: மிஸ்டர் சர்ச்சில்	1	யுத்தமும் நாமும்	8
துக்கப்படவோ சந்தோஷப்படவோ நேரமில்லை ..	1	யுத்தம் போகிற போக்கு	9
முரசொலி	2	'கொசு'வைக் கண்டு அலறல்	10
தலைசிறந்த நன் கொடை	2	வானொலி நாட் குறிப்பு	10
தலையங்கம்: ஹிட்லர் மன நிலை	3	அரிசி உண்பவர்களுக்கு ஒரு வேண்டுகோள் ..	11
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4	'ப்ளாரென்ஸ் நைட்டிங் கேல்' உருமாற்றம் ..	11
பாட்டு: விஷ் விருட்ச வீழ்ச்சி	5	யுத்த நாட் குறிப்புக்கள்	12
படங்கள்	6—7	வானொலி: செஞ்சிலுவைப் பிரசங்கம் ..	12

மு ர சொ லி

"தடைகளைப் போடுவதனாலும் வெடி குண்டுகளை வீசுவதனாலும் மட்டும் ஜப்பானியர்களை வெல்ல முடியாது."

—ஜெனரல் மெக்கார்தர்,
பிப்ரவரி மாதம் 16-ம் தேதி விடுத்த அறிக்கை.

* * * * *

"அமெரிக்கத் தரைப் படையும், கப்பற் படையும் சாலொமன் தீவுகளில் பூரண ஆதிக்கம் பெற்று விட்டன."

—மிஸ்டர் ஹென்ரி ஸ்டிம்சன்,
அமெரிக்க யுத்த மந்திரி, பிப்ரவரி மாதம் 17-ம் தேதி கூறியது.

* * * * * *

"திரும்பவும் நாம் டோக்கியோவுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். நாம் முழு பலத்தோடும் மகத்தான நேச நாடுகளுடன் சேர்ந்து போவோம். வெகு சீக்கிரத்தில் ஜப்பானின் தலை நகரத்தையே தாக்க வேண்டு மென்று நாம் கொண்டிருக்கும் மன உறுதியைப் போலவே, தாமும் கொண்டிருப்பதாக, பிரிட்டிஷ் பொது ஜனத் தலைவர்களும் இராணுவத் தலைவர்களும் என்னிடம் கூறினார்கள்."

—மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் டூலிட்டில்,
அமெரிக்க 8-வது விமானப் படைத் தலைவர், லண்டனில் பிப்ரவரி மாதம் 20-ம் தேதி கூறியது.

* * * * * *

த லை சி ற ந் த ந ன் கொ டை

செ ன் னை க் கு ச் சீ ன உ த வி

இம் மாகாணத்திலுள்ள கஷ்ட நிவாரணத்தை முன்னிட்டு, சீன-இந்திய கலா சங்கத்தின் சார்பாக, சீன ஸ்தானீகர் டாக்டர் சி. ஜே. போ., மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுக்கு ரூ. 20,000 அனுப்பி யிருக்கிறார். இந்தத் தலை சிறந்த நன் கொடையை நன்றியோடு ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கும் முறையில் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் அவருக்கு எழுதியதாவது :—

"இம் மாகாணத்தில் கஷ்டத்திற்குள்ளாகி யிருப்பவர்களின் நிவாரணத்தை முன்னிட்டு சீன-இந்திய கலா சங்கத்தின் சார்பாகத் தாங்கள் அனுப்பிய தலை சிறந்த நன் கொடை ரூ. 20,000யும் நன்றியோடு ஏற்றுக் கொண்டேன். மிகச் சிறந்த முறையில் தாராளமாக உதவியது பற்றி, அச்சங்கத்தாருக்கும், அவர்கள் வாயிலாக சீன மக்களுக்கும் சென்னை மாகாண மக்களின் நன்றி செறிந்த பாராட்டுதலையும், எனது நன்றி செறிந்த பாராட்டுதலையும் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தத் தொகையை அனுப்பியவர்கள், பெரிதும் கஷ்டங்களுக்கு உள்ளாகி யிருக்கும் சீன மக்கள், யுத்தங் காரணமாகக் கடுமையாகத் துன்பப் பட்டவர்கள். அக்கிரமக் காரர்களோடு நெடு நாட்களாக வீரத்தோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, யதேச்சை நாட்டமுடைய அனைவரும் அவர்களைப் பற்றி ஆச்சரியமும் இரக்கமும் கொள்ளுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் இந்த நன் கொடை வழங்கியது பெரிதும் பாராட்டத் தக்கது.

"மகா தாராளமாகத் தாங்கள் உதவியுள்ள நன் கொடையை, விசாகப்பட்டினம் ஜில்லா சிக்காகோவில் ஏற்பட்ட புயற் சேதத்தால் பெரிதும் கஷ்டப் படுகிறவர்களுக்கு அரசாங்கத்தார் உதவுவதாக உத்தேசித்துள்ள தொகையோடு சேர்த்து உதவுவதென்று நான் நினைத்திருக்கிறேன். அன்றியும், பர்மாவிலிருந்து இந்தியாவில் சரண் புகுந்து எமது அரசாங்கத்தில் வேலை கொடுக்கப்பட்டு வருகிறவர்களுக்கும், இது பயன் படுத்தப் படும். இந்தத் தொகை எப்படிச் செலவிடப்படுகிறது என்பது பற்றிய கணக்கைத் தங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறேன்.

தாங்கள் அனுப்பிய புது வருட வாழ்த்துக்கு நன்றி கூறி, தங்களையும் நான் வாழ்த்துகிறேன்.

நமது கூட்டுப் படைகள் மேன் மேலும் வெற்றிகள் பெற்று, நீதியும் விடுதலையும் உலக முழுதும் நிலவுமென்பது தான் எனது மனமார்ந்த பிரார்த்தனை."

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ௵ பிப்ரவரி ௴ 25 ௳, வெள்ளிக்கிழமை | இதழ் 25

ஹிட்லர் மன நிலை

"உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரு பக்கம் இடி" என்பது பழமொழி. இத்துடன் 'ஹிட்லருக்குப் பல பக்கங்களிலும் இடி' என்னும் வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ளுவது மிகவும் பொருத்தமாயிருக்கும். ஏனென்றால், ஹிட்லர், அத்தனைப் போர் முனைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. முதலாவதாக, உக்ரேய்ன் போர்முனை. இதை முதலாவது என்று கூறியதற்கு முக்கிய காரணங்களுண்டு. உக்ரேயன் தான் கறவைப் பசு போன்றது. உணவுப் பொருட்களும், எண்ணெய், நிலக்கரி, மாங்கனிஸ், தாமிரம், சர்க்கரை முதலிய பலவகைத் தளவாடப் பொருட்களும் அங்கே ஏராளமாகக் கிடைக்கின்றன. இவற்றைக் கைப்பற்றிய பெருமையால் இறுமாந்திருந்த ஹிட்லர், அதை இழக்கும் சிறுமைக்கு ஆளாக நேர்ந்தது. இரண்டாவதாக லெனின்கிராட் போர்முனை. இங்கே, நாடு பிடிக்கும் பொருட்டு ஆயிரக் கணக்கான படைகளைப் பலி கொடுத்து அங்குலம் அங்குலமாக ஜெர்மானியர்கள் கைப்பற்றினார்கள். ஆனால் அதை ரஷ்யப் படைகள் மீட்டுவிட்டன. அது மட்டுமா? இதை மீட்கும்போது இருதரத்தாரும் கடும் போராடியதன் பயனாக, ஹிட்லருக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சமல்ல. மூன்றாவதாக, ஜெர்மனியர் கைப்பற்றிய மற்ற நாடுகளிலும், அவர்களுடைய ஆதிக்கம் குலைந்து கொண்டு வருகிறதாகத் தெரிகிறது. போலந்தில் ஜெர்மானியர்கள் கைப்பற்றியிருந்த நாடுகளில் பெரும்பகுதியை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். இதுவும் ஹிட்லருக்குப் பெரும் நஷ்டமல்லவா? நிற்க, பிரான்சைப் பற்றி சற்று கவனிப்போம். பிரான்சு முழுதும் ஜெர்மானியின் சூத்திரக் கயிற்றால் இயங்கும் ஆட்சிதான் நடைபெறுகிறது. ஆகவே, அங்கே நாட்டுப் பற்றுடைய இயக்கம் தலைமறைவாக வேலை செய்து கொண்டு இருக்கிறது. அடிக்கடி அங்கே அரசியல் கொலைகள் நடப்பதற்கு அதுதான் காரணம். ஜெர்மன் இராணுவத்தில் சேர்ந்துள்ள பிரஞ்சுக்காரர்களில் சிலர் தான் அரசியல் கொலைகள் புரிந்தவர்கள் என்று சமீபத்தில் தீர்மானித்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பிரான்சுக்குள் உள்நாட்டு கலகங்கள் நேராதபடியும், எதிரிகள் படையெடுத்து வராதபடியும் காப்பாற்ற வேணடிய பொறுப்பு ஹிட்லருக்கு ஏற்பட்டுவிட்டது. இதோடு போயிற்றா? ஹிட்லரின் மனமார்ந்த தோழர் முசோலினி. அவர் சிறகொடிந்த பறவை போல் தவிக்கிறார். 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்னும் பொய்யாமொழிக் கிணங்கியோ, என்னவோ, இத்தாலியைப் பாதுகாக்க வேண்டிய மகா கஷ்டம் ஹிட்லருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது அவருக்கு மகா கஷ்டமான வேலைதான். எப்படி என்றால், "ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பார்கள். அதுபோலவே இன்று இத்தாலியில் படோக்லியோ கோஷ்டி யென்றும் முசோலினி கோஷ்டி யென்றும் இரண்டு பிரிவுகள் உண்டாகி விட்டன. இதன் பயனாக மிகுந்த கஷ்டத்திற் குள்ளாகாமல் நேச நாட்டுப் படைகள் இத்தாலியில் கால் வைக்க முடிந்தது. நேசநாட்டுப் படைகள் விரைவில் முன்னேறிக் கொண்டு வருவதைக் கண்டு ஹிட்லர் பாடு வெலவெலத்து விட்டது. தன் சிறந்த படைகளை இத்தாலிக்கு அனுப்பினார். அங்கே கடுமையான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மலைகளும் மழைகளும் ஜெர்மானியர்களுக்குச் சாதகமாயிருந்தாலும், நேச நாடுகளின் தளராத ஊக்கமும் அஞ்சாத உள்ளமும் தலைசிறந்த போர்த்திறமையும் அவர்களுக்குப் பக்கத் துணைகளாயிருக்கின்றன. எனவே, விரைவில் முன்னேறக் கூடா விட்டாலும், படிப்படியாக முன்னேறிக் கொண்டு தான் இருக்கின்றனர். இதுவும் ஹிட்லர் வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டிருக்கும். போதாக் குறைக்கு, ஜெர்மன் ஆட்சி முறைக்கு உட்பட்டிருந்த ருமேனியா, யுகோஸ்லாவேகியா முதலிய நாடுகளில் உள் நாட்டுக் கலகங்கள் முனைந்துவிட்டன. இவற்றையும் சமாளிக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் விட, மிகவும் முக்கியமானது ஜெர்மன் மக்களின் மனோ நிலை. இவர்கள் மனோ உறுதி நாளுக்கு நாள் சிதைந்து கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் இரவென்றும் பகலென்று மில்லாமல் வெடிகுண்டு மாரி பெய்து கொண்டே யிருப்பது தான். வருஷக் கணக்காக அந்நாட்டில் வெடிகுண்டு மாரி பெய்து கொண்டிருந்தால், அந்நாட்டு மக்கள் வாழ்வதா? சாவதா? அரசனன்றோ மக்களைக் காக்கும் பொறுப்புடையவன்? இதில் முக்கியமான விஷயம் மற்றொன்று உண்டு. போர்முனைகளில் மக்கள் இறந்து படுவது இயல்பு தான் என்று மனச் சாந்தி கொள்ளலா மென்றாலோ, முடியவில்லை. மக்கள் இனந் தழைப்பதற்குப் பதில், சிதைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து வரும் ஹிட்லர் தோல்விப் படலம் இன்னும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கும். ஆகவே ஹிட்லருடைய மனோ நிலைமை எப்படி யிருக்கும்? 'நீராடப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது' போலல்லவோ இருக்கிறது அவருடைய நிலைமை. "அடாது செய்வோர் படாது படுவர்" என்னும் பழமொழிக்கு ஒரு சான்றாக விளங்குகிறார் ஹிட்லர்.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

மத்திய பசிபிக் போரின் புதுப் போக்கு.

கரோலைன் தீவுகளின் இருதயம் போன்ற ஜப்பானிய கப்பற் படைதளம் தான் ட்ரக். இதை அமெரிக்கக் கப்பற் படையும் விமானப் படையும் பிப்பிரவரி மாதம் 16-ம் தேதி முதல் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இச் செய்தி, அதற்கு மறுநாள் அதாவது 17-ம் தேதி வெளியிடப்பட்டது. அதற்கு முன்னதாகவே, அமெரிக்கக் கப்பற்படையைச் சேர்ந்த மிட்சி வெடிகுண்டு விமானிகள் ட்ரக்குக்கு மேலே பறந்து, படங்களெடுத்துச் சென்றிருந்தனர். முதன் முதல் ட்ரக்குக்கு மேலே பறந்த வெள்ளையரான விமானிகள் இவர்கள் தான்.

கரோலின் தீவுகளில் போனேப் என்பதும் ஒன்று. இது ஜப்பானியர் ஆளுகைக்குட்பட்ட முக்கியமானதோர் தளம். இதையும் அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் பிப்பிரவரி மாதம் 14-ம் தேதி தாக்கின. இது ட்ரக்குக்குக் கிழக்கே 400 மைல் தூரத்திலுள்ளது. இதுவும் கரோலின் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்தது தான். ஜப்பானியர்கள் தம் நிர்வாக வசதியை முன்னிட்டு, கரோலின் தீவுகளை கிழக்குப் பகுதியென்றும் மேற்குப் பகுதியென்றும் பிரித்திருக்கிறார்கள். கிழக்குக் கரோலின் தீவுகளில் ட்ரக்கும் போனேப்பும் தலை நகரங்களாக விளங்குகின்றன. மார்ஷல் தீவுகளுக்கும் போனேப்புக்கும் 600 மைல்கள். ஆகவே, மத்திய பசிபிக் போர் முனை ஜப்பானுக்கு 600 மைல்கள் அருகில் வந்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். அதுவும் மார்ஷல் தீவுகளைத் தாக்கிய இரண்டு வாரங்களில் போனேப்பும் தாக்கப்பட்டது. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. ஜப்பானுக்கு அருகிலேயே போர் முனையை அமைக்க வேண்டுமென்னும் நோக்கத்துடனே தான், போனேப்பையும் ட்ரக்கையும் ஜெனரல் நிமிட்ஸ் தாக்கினர் என்று எண்ண இடங் கொடுக்கிறது.

பசிபிக் மகா சமுத்திரத்தில் நடைபெறும் போராட்டத்தின் போக்கை ஜப்பானியத் தலைவர்கள் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு தானிருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன்னதாக ஜப்பானிய முதன் மந்திரி டோஜோ உண்மையான போர் நிலைமை பற்றி, அரசாங்க சபைக்கு 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25-ம் தேதி தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது :—

> "சீனாவில் தம் விமானக் கூட்டங்களை நேச நாட்டினர் பெருக்கிக் கொண்டிருந்தனர். சாலமன் தீவுகள், நியூகினி, அலூஷியன் தீவுகள் ஆகிய இடங்களில் அவர்கள் நம்மை எதிர்த்துத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தான் போராட்டம் உண்மையிலேயே ஆரம்பமாகிறது."

அப்போது தான் உண்மையிலேயே போர் ஆரம்பமானது. என்றாலும், அதன் கடுமையை ஜப்பானியத் தலைவர்கள் இப்போது தான் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள். நேச நாட்டு வெடிகுண்டு விமானங்களின் கடுமையான தாக்குதல்களைத் தாங்குவதற்கான ஆயத்தங்கள் இப்போது தான் செய்யப்பட்டு வருகின்றன. சென்ற ஜனவரி மாதம் 25-ம் தேதி விமானத் தாக்குதல் பாதுகாப்புப் பற்றி, ஒரு ஜப்பானிய பிரசங்கியார் கூறியதாவது :—

> "ஒரு நாளையில் நான்கு அல்லது ஐந்து முறை விமானத் தாக்குதல் நேரலாம். அல்லது, தொடர்ச்சியாகப் பல மணி நேரம் நடை பெறலாம்.... போராட்டம் வானத்தில் தான் பெரும்பாலும் நடை பெறுகிறது. இதற்கு, அநேக விமானங்கள் வேண்டியிருக்கிறது. இங்கே நமக்குப் போதுமான விமானங்களுமில்லை; விமான நிலையங்களுமில்லை."

டோக்கியோவில் விமானத் தாக்குதல் அச்சம்.

அந்த ஏ.ஆர்.பி. பிரசங்கியார் கூறியது போலவே தான், ப்ரம்ஷிரோவில் நடை பெற்றது. நாளடைவில் ஜப்பானுக்குக் கிடைக்கப்போகிற கசப்பு மருந்துக்கு ஒரு 'சாம்பிள்' தான் ட்ரக், போனேப் தாக்குதல்கள். நிற்க, சமீபத்தில், ஜப்பானிய அரசாங்க சபையில் டோஜோ ஒரு பிரசங்கம் செய்தார். ஜப்பானிய மக்களுடைய மன உரத்தைப் பெருக்கும் பொருட்டுத் தான் அவர் பேசினார். இதினின்று விமானத் தாக்குதல்கள் பற்றி ஜப்பானியர்கள் எவ்வளவு பீதி கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. தமக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவற்றையுங் கொண்டு, மேலும் மேலும் விமானங்களுக்கு மேல் விமானங்கள் கட்ட முயற்சிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். அவர் மேலுங் கூறியதாவது :—

> "விமானத் தாக்குதல்கள் நேராதபடி தடுக்கவும், யுத்தத்தின் எதிர்காலப் போக்கிற்கு ஏற்றபடி ஆயத்தங்கள் செய்யவும், இரவும் பகலும், ஓய்வு ஒழிவின்றி, பல விடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள படைகள், உழைக்க வேண்டியிருந்தது."

இந்த வாக்குறுதியை ஆதாரமாகக் கொண்டு, ஜப்பானிய அரசாங்க சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானத்தில்,

> "தாய் நாட்டை எதிரிகள் கடல் வழியாகவும் ஆகாய வழியாகவும் வந்து தாக்காதபடி பலமான அசைக்க முடியாத அரண்களை ஜப்பானிய சாம்ராஜ்யப் படைகள் ஏற்கெனவே அமைத்து விட்டன" வென்று குறிப்பிட்டிருக்கிறது.

வேறு சில ஜப்பானியத் தலைவர்கள் தம் அரண்களைக் குறித்து அவ்வளவு நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. 1942-ம் வருஷம் டிசம்பர் மாதம் 28-ம் தேதி ஜப்பானிய படைத் தலைவரான ஹிராஷி சுசுகி கீழ்க்கண்டவாறு கூறினர் :—

> "பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் பிடிவாதமுள்ளவர்கள்....முடிவான வெற்றியில் அவர்கள் எப்போதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்."

அவர் ஜெர்மனியைக் குறித்து மேலும் பேசிய போது, "ஜெர்மனி பல போராட்டங்களில் வெற்றி பெற்றாலும், இந்த யுத்தத்தில் கட்டாயம், தோற்கத் தான் போகிறது" என்று குறிப்பிட்டார்.

1942-ம் வருஷத்திலேயே அவர்கள் மன நிலைமை அப்படியிருந்திருக்குமானல், இப்போது அவர்களுடைய மனம் மேலும் பீதி கொண்டு தானிருக்க வேண்டும். இதை மெய்ப்பிக்க ஏராளமான சான்றுகள் இப்போதிருக்கின்றன. சென்ற மாதத்தின் இரண்டாவது வாரத்தில் ஜப்பானிலிருந்து வாஷிங்டனுக்கு ஒரு கடிதம் வந்தது. அது ஒரு அபூர்வமான கடிதம். தணிக்கைக்குத் தப்பி வந்தது. அதில் கீழ்க்கண்ட முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன :—

> "இங்கே வாழ்க்கை மேலும் மேலும் கஷ்டமாகிக் கொண்டே வருகிறது. டோக்கியோவிலிருந்து அந்நிய நாட்டினரை அப்புறப்படுத்துவதைக் குறித்து பேச்சு நடைபெறுகிறது. சமீபத்தில் விமானத் தாக்குதல்கள் நேரக் கூடும் என்பதும் ஒரு காரணம்.. அன்றியும் பொருளாதார நிலையும் மிகவும் சீர்கெட்டிருக்கிறது....அங்கங்களை இழந்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் நிறைந்திருக்கிறார்கள். பிடிவாத குணமுள்ளவர்கள் இரவுகளில் பள்ளங்களை வெட்டுகிறார்கள். அருணோதய வேளையில் பிடிவாத குணமுள்ள மற்றவர்கள் அதில் வீழ்கிறார்கள்.... போக்குவரவிற்கான ரயில் வண்டிகள் சீர்கேடான நிலைமையிலிருக்கின்றன ....மக்கள் உயிரை வைத்துக் கொண்டிருப்பது பெருங் கஷ்டமாயிருக்கிறது."

இந்த விவரங்களிலிருந்து ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. தென் கிழக்கு ஆசிய நாடுகளை ஜப்பானியர் கைப்பற்றியதன் பயனாக, ஜப்பானிய இராணுவத்தினருக்கும் வியாபாரக் கூட்டத்தினருக்கும் மட்டுந் தான் நன்மை உண்டானதே யொழிய, ஜப்பானிய மக்களுக்கு நன்மையே கிடையாதென்று விளங்குகிறது. டோக்கியோவிலுள்ள ஒரு பர்மிய (பெண்) பத்திரிகா நிருபர் தெரிவித்துள்ள விவரங்கள், இதை உறுதிப்படுத்துகிறது. லில்லி அபெக் என்னும் அவ்வம்மையார், "பெர்லினர் போர்சென் செய்துங்" என்னும் பத்திரிகைக்குக் கீழ்க்கண்டவாறு எழுதினர்.

"எங்கு பார்த்தாலும் யுத்த குறிகள் காணப்படுகின்றன....ஜப்பானிய பெண்களில் பலர் நாளொன்றுக்கு பத்து மணி நேரமும், அதற்கு அதிகமாகவும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள்....டோக்கியோவி லிருந்த ஆயிரக் கணக்கான சிறு கடைகள் மூடப்பட்டு விட்டன."

ஜப்பானியர்களுடைய மன உறுதி தளர்ந்து கொண்டு வருகிறது என்பதற்கு வேறு பல சான்றுகள் காணப்படுகின்றன. புகழ்வாய்ந்த பத்திரிகைகளில் இவற்றைப் பரக்கக் காணலாம். அவற்றின் ஒரு பகுதியை மொழி பெயர்த்துக் கீழே தருகிறோம்.

"ஜப்பானிய நகரங்களிலும் கிராமங்களிலும் முக்கியமான பதவிகளிலுள்ள அறிஞர்கள் பிரிட்டிஷார் சார்பாக ஐந்தாம் படை வேலை செய்கிறார்கள் என்பதை நாம் அறியாது, அவர்களை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பிரிட்டனிலோ ஜப்பானிலோ ஜப்பானுக்குச் சாதகமாக ஐந்தாம் படை வேலை செய்கிறவர்கள் யாரையும் நாம் ஏற்படுத்தப்படவில்லை. நமது மனத்தால் பிரிட்டனையும் அமெரிக்காவையும் நாம் நசுக்கி எறிந்தால் மட்டுந் தான், ஜப்பானுக்கு அப்பால் வெகு தூரத்திலுள்ள அந்நாடுகளையும் நசுக்க முடியும்."

"தினசரி வாழ்க்கை முறையில், தமக்குத் தேவையான பொருள்கள் போதுமான அளவு கிடைக்கவில்லை என்றோ, அல்லது வேறு வகைக் கஷ்டங்கள் உண்டு என்றோ, யாராவது தனிப்பட்ட எவரும் வெளிக்குக் காட்டிக் கொள்வாரானால், அதனால் ஏற்படக் கூடிய நிலைமையை உடனே எதிரிகள் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்வார்கள். அதைத் தமக்கு ஆதாரமாகக் கொண்டு, மக்கள் மனதில் யுத்தத்தைக் குறித்த சலிப்பும், படைகளுக்கு விரோதமான உணர்ச்சியையும் உண்டாக்கி, நமது பொருளாதார அமைப்பைச் சீர்குலைத்து விடுவார்கள்."

பரிபூரண யுத்தத்தை நடத்த வேண்டியிருப்பது பற்றியும், ஐந்தாம் படையினரைச் சமாளிக்க வேண்டியிருப்பது பற்றியும், ஜப்பானிய அரசாங்கம் பெரிதும் கவலை கொண்டிருக்கிறது என்று தெளிவாகத் தெரிகிறது. ஜப்பானியப் பொது மக்களோ, அனுபவத்தினால் நன்றாகப் பக்குவப்பட்ட மனோ உறுதி கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்களுடைய மன உறுதி இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டதென்று கருதிவிட முடியாது. அவர்களுடைய மனோ நிலை எப்போது சிதறும் என்று நிச்சயமாக யாரும் சொல்ல முடியாது. நெடு நாட்கள் செல்லவுங் கூடும். கவனிக்கத் தக்க மற்றொரு விஷயம்: பாசிஸ்டு நாடுகளைப் போலவே இங்கேயும், ஆட்சியினருக்கு, அறிஞர்கள் ஆபத்துண்டாக்கக் கூடியவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

ஜப்பான் பிரசாரமும் பொது மக்கள் மனோ தத்துவமும்

ஒரே காலத்தில் இரண்டு வகைப் பிரசாரம் செய்வது ஜப்பானிய பிரசாரகர்களுக்கு ஒரு கஷ்டமான காரியமல்ல. தாம் வெற்றிகள் பல பெற்று விட்டதாகப் பொய்களைப் புனைந்து சொல்லுகிறார்கள். அதே சமயத்தில், உணவு, கப்பல் போக்கு வரவு, உற்பத்தி, நேசநாட்டினரின் பலம் நாளுக்குநாள் ஓங்கி வளருவது ஆகியவை பற்றியும் அதனால் ஏற்படக் கூடிய கஷ்ட நஷ்டங்களைக் குறித்தும் வெகுவாக எச்சரிக்கிறார்கள். மூட நம்பிக்கையை யடிப்படையாக கொண்டே, ஜப்பான் மக்கள் தம் வாழ் நாளெல்லாம் கழிக்கிறார்கள். தம் சக்கிரவர்த்தியே கடவுள் என்று கண்மூடித்தனமாக வணங்குகிறவர்கள். தம் உயிரை விட்டாலும் விடுவார்களே யொழிய, தம் கட்டுப்பாடு விதிகளையும் கொள்கைகளையும் கொஞ்சங் கூடத் தளர்த்திக் கொள்ள மாட்டார்கள். லௌகிக விஷயங்களில் மேல் நாட்டாரிடமிருந்து எத்தனையோ விஷயங்களை ஜப்பானியர் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும், உயர்ந்த ஜாதி என்னும் பண்டைப் பித்தம் அவர்களை விட்டு இன்னும் நீங்கியபாடில்லை. எழு கோடி பேர்களான ஜப்பானியர்கள் மேல் நாட்டுப் புதுமைகளையும் விஞ்ஞானத்தையும் நன்றாக உணர்ந்திருந்த போதிலும் கூட, தாம் தெய்வீகப் பிறவிகளாகையால், மற்றவர்களை விடத் தாம் உயர்ந்த வகுப்பார் என்ற முட்டாள் தனமான மூட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வருகிறார்கள், என்பது உண்மையிலேயே நம்பக் கூடாததாய்த் தான் தோன்றும்.

தம் சக்கரவர்த்தியையே தம் கடவுள் என்று நினைத்து அவரை வழிப்படுகிறார்கள். யசுகினி கோவிலில் இறந்து போனவர்களுக்கு, தெய்வீகம் கற்பிக்கிறார்கள். வரைவில் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதல் என்னும் "சுஷிடோ" முறையை வெகுவாகப் பாராட்டுகிறார்கள். இவையெல்லாம் எதை வெளிப்படுத்துகின்றன என்றால், உலக விஷயங்களில் அவர்கள் என்ன தான் முன்னேற்றமடைந்திருந்தாலும், அவர்களுடைய மனநிலை மட்டும் பண்டைய நிலையிலேயே இருக்கின்றது என்பது தெளிவாகிறது.

ட்ரக்கையும் பெனேப்பையும் நேசநாட்டுப் படைகள் தாக்கிய செய்தியின் முக்கியத்துவம், ஜப்பானிய பொது மக்களுக்குத் தெரிந்திருக்காது. ஆனால், சமயம் வரும். அப்போது, தமக்குள்ள அறிவைக் குறித்தும் தம் தலைவர்களுக்குள்ள நடத்துந் திறமையைக் குறித்தும் அவர்களுக்குள்ள நம்பிக்கை கலகலத்து விடும். இப்போது நேசநாட்டு விமானிகள் பெர்லின் நகர் மீது வெடி குண்டுகளைச் சொரிவது போலவே, டோக்கியோ மீதும் சொரியும்போது தான், அவர்களுக்கு விளங்கும்.

விஷ விருட்ச வீழ்ச்சி

இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி

விழுந்தது பார் அச்சு விஷ விருட்சம்—அதில்
எழுந்தது யார் உலகின் எழில் சுபீட்சம்—இன்றே (விழு)

அனு பல்லவி

அழுந்தும் சிறு நாடுகள் அடிமைத் தளை கழண்டு
ஆக்ரமிக்கும் கொடுங்கோல் நாசிச் சக்தியுழன்று (விழு)

சரணம்

1. பாசிச இத்தாலியாம் பக்க வேரற்றதாலே
பழி வாங்கும் ரஷ்யர் கைவாள் பதிந்துட லூற்றதாலே,
நேச எதிர்ப்பின் சக்தி நீள் பலம் பெற்றதாலே
(முடுகு) நீணில மீதுசர் வாதிகார மெனும்
ஆணி வேரறுந் தடியுடன் சாய்ந்து (விழு)

2. அமைதியாம் சாகரத்தில் அவனியாம் தோணி நின்று
அச்ச மற்றே மிதக்கும் நிச்சயம் போரகன்று
சுமை சுமை யாக வின்பம் சுரக்கும் நற் காலம் என்று
(முடுகு) சுதந்தர இந்தியப் பூமலர்ப் பூவினைத்
துதிக்கும் நாள் விரைவில் உதிக்கு தெனப் புகன்று
(விழு)



ரங்கூனை ஜப்பானியர் தாக்கிய போது ஆம்புலென்ஸ் டைரக்டராக விருந்த லெப்டினெனட் சார்ஜெண்ட் ஹினல்ட், இப்போது பர்மியப் படையி லிருக்கிறார். அவருடன் பிரதம படைத் தலைவர் பேசுகிறார்.



டில்லி தந்தியில்லாக் கம்பெனியில் வேலை செய்யும் பெண்களை பிரதம படைத் தலைவர் பார்வை யிடுகிறார்.



உத்தியோகஸ்தர்கள் அணிவகுப்பின் தலைவரான பகுதிக் கமாண்டர் இ. எம். டென்னிசுடன் பிரதம படைத் தலைவர் அணிவகுப்பைப் பார்வை யிடுகிறார்.

பர்மாவினின்று சரண் புகுந்தவர்களைக் கொண்ட ஒரு பட்டாளத்தை பிரதம படைத் தலைவர் பார்வை யிடுகிறார்.



படைத் தலைவர் எம். இ. டக்ளசோடு, பிரதம படைத் தலைவர் நடந்து செல்லுகிறார்.

படைத் தலைவர் விஜயத்திற்குப் பிறகு, பெண் தொண்டர் படையினர் லாரிகளில் புளி மூட்டைகளைப் போல அடைக்கிறார்கள்.



உத்தியோகஸ்தர் பயிற்சி சாலையிலுள்ள டப்னி வில்லியம்சன் சமீபத்தில் விக்டோரியா பதக்கம் பெற்ற ஜமேதார் கஜேகலேயுடன் கைகுலுக்குகிறார்.

இந்தியப் பெண்கள் உதவிப் படை உத்தியோகஸ்தர்கள் பயிற்சிக்காக டக்ஷாயில் அணிவகுத்து நிற்கின்றனர்.



இந்தியப் பெண்கள் உதவிப் படை உத்தியோகஸ்தர்கள் பயிற்சி பெறுகிறார்கள்.

இந்தியப் பெண்கள் உதவிப் படை உத்தியோகஸ்தர்கள் 'டென்னிஸ்' விளையாடும் காட்சி.

உத்தியோகப் பயிற்சி சாலையில் ஓய்வு வேளை.

தம் பயிற்சி சாலைக்குப் போவதற்கு இந்தியப் பெண் உதவிப் படை உத்தியோகஸ்தர்கள் டில்லியில் ஆயத்தமாகிறார்கள்.

யுத்தமும் நாமும்

(மிஸ்டர் எஸ். சுயம்பிரகாசம், பி.ஏ., பி.எல்.)

தற்பொழுது, உள்நாட்டில் உணவுப் பொருள் கட்டுப்பாடு பங்கீடு முறை முதலியவைகளைக் குறிப்பிட்டு நம் நலத்தை முன்னிட்டு என்ன செய்ய வேண்டும் என்பதை ஓருவாறு குறிப்பிட ஆசைப் படுகிறேன்.

மேனாட்டிலே மக்கள் சமாதான காலத்தில் எப்படி வாழவேண்டும், யுத்த காலத்தில் எப்படி வாழவேண்டும் என்பதைத் தாங்களே அறிந்து நடந்து கொள்வதோடு கட்டுப்பாடு முறைகளையோ, பங்கீடு முறைகளையோ சீக்கிரம் உண்டு பண்ண வேண்டும் என்று மக்கள் அரசாங்கத்தை விரும்பி நின்றார்கள். அந்த நாட்டிலே யுத்தம் ஆரம்பித்தவுடனே, வீண்பிரயாணத்தை ஒழிக்கின்றார்கள். ஆடம்பர வாழ்க்கையை அகற்றுகின்றார்கள். சிக்கன வாழ்க்கையை கைக்கொள்ளுகிறார்கள். தங்கள் உடையையும் ஆகாரத்தையும் தாங்களே குறைத்துக் கொண்டு, அரசாங்கத்தாரையும் கட்டுப்பாட்டு திட்டத்தை சீக்கிரம் ஏற்படுத்த விரும்புகிறார்கள். ஆனால் நம் நாட்டு மக்களைப் பற்றி நீங்களே அறிவீர்கள். நான் இது சம்பந்தமாக ஒன்றும் கூறவில்லை.

யுத்த காலத்தில் உணவுப் பங்கீட்டின் அவசியம்.

உணவுப்பொருள் சம்பந்தமாக அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் கட்டுப்பாடு திட்டம் மேம்பார்வையாக பார்ப்போருக்கு மக்களுடைய உரிமையைப் பாதிப்பது போலவும், தாங்கள் வழக்கமாக அனுசரித்து வந்த சில சௌகரியங்களையும், பழக்கங்களையும் பாதிக்கக் கூடியது போலவும் காணப்படலாம். ஊன்றிக் கவனிக்கும் மக்களுக்கு, யுத்த காலத்தில் அப்படிப்பட்ட கட்டுப் பாட்டு திட்டங்களை ஏற்படுத்தி, அவைகளைத் திறமையாக அமுலில் வைத்தால் ஒழிய, தேசமக்களின் உயிர் நாடிக்கே அவசியமாகிய உணவுப் பொருள் வினியோகம் சரியாக நடைபெறாது என்பது நன்கு புலப்படும்.

சென்னை மாகாணம் சம்பந்தப் பட்ட மட்டில் மக்களுக்கு முக்கிய ஆதாரமாக வுள்ளது அரிசி என்பது யாவரும் அறிந்த உண்மை. ஜப்பானியர் யுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக, பர்மா, சியாம், இண்டோசைனா முதலிய இடங்களிலிருந்து வந்து கொண்டிருந்த அரிசியில் பத்தில் ஒருபங்கு குறைபட்டது. அதனோடு சிலோன், திருவாங்கூர், கொச்சி, பாம்பே முதலிய இடங்களுக்கு வந்து கொண்டிருந்த அரிசியும் நின்றுவிட்டது. ஆதலால் தான், இந்த மகாணத்துக்கு வேண்டிய உணவுப் பொருளுக்கு ஏற்பாடு செய்வதோடு கூட, பக்கத்திலுள்ள சமஸ்தானங்களாகிய கொச்சி, திருவாங்கூர், புதுக்கோட்டை முதலிய இடங்களிலுள்ள மக்களுக்கும் உணவுப்பொருள் காண வேண்டிய பொறுப்பு, சென்னை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அதிக விளைவுள்ள ஜில்லாக்கள்.

சென்னை மாகாணமதில் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் போக வெளி யூருக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையில் உள்ள ஜில்லாக்கள் சுமார் எட்டு ஜில்லாக்களாகும். இவைகளிலிருந்து கிடைக்கக் கூடிய நெல், அதாவது அந்த ஜில்லாக்களின் மக்களுக்கு வேண்டிய நெல் போக வெளியூருக்கு அனுப்பக் கூடிய நெல் 700 ஆயிரம் டன் நிறை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1 டன் சுமார் 13–1/2 மூட்டையளவு. மற்ற ஜில்லாக்கள், தங்களுக்கு வேண்டியவைகளை மட்டும் உற்பத்தி செய்யவோ அல்லது வெளி ஜில்லாக்களை எதிர்பார்த்து இருக்கக்கூடிய நிலையிலோ இருக்கிறது. அப்படியுள்ள அந்த ஜில்லாக்களுக்கு அனுப்பவேண்டிய நெல் அளவு சுமார் 850 ஆயிரம் டன் நிறையாகும்.

சமாதான காலத்தில் வேண்டிய உணவுப் பொருள் தேவைக்குத் தகுந்தாற் போல வியாபாரத்தின் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அரசாங்கத்தார் அதில் குறுக்கிடவே யில்லை. யுத்தம் காரணமாக வெளி நாட்டு அரிசியை எதிர் பார்க்க முடியவில்லை. ரெயில்வே முட்டுப்பாட்டால் ஒரு மாகாணத்தி லிருந்து மற்றொரு மாகாணத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி முடியவில்லை. ஆகையினால், யுத்த காலத்தில் எல்லா மக்களுக்கும் வேண்டிய உணவுப் பொருள்களைக் காணவும், கண்ட பொருளைச் சேர்த்துச் சிறிதும் வீணாக்காமலும், அல்லது தேவையல்லாத இடங்களில் சுயநலத்தைக் கருதிய வியாபாரிகள் சேமித்து வைக்காமலும் எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

திருட்டு வியாபாரத்தை ஒழிக்க வேண்டும்.

அதற்காக எல்லோருக்கும் சௌகரியமான முறையில் விலை நிர்ணயிக்க வேண்டியதா யிற்று. அதிக லாபத்துக்கு விற்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டிய தாயிற்று. திருட்டுத்தனமாக நடத்தும் வியாபாரத்தை ஒழிக்க வேண்டியதா யிற்று. உணவுப் பொருள் நெருக்கடியால் பஞ்சம் நேரிடா வண்ணம் பார்க்கவேண்டிய தாயிற்று. தேவைக்குத் தகுந்தவாறு உணவுப் பொருளை உற்பத்தி யாக்க வேண்டிய தாயிற்று. இந்நோக்கத்தோடு தான் அரசாங்கத்தார் உணவுப்பொருள் கட்டுப்பாடுத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்திட்டங்களைப் பற்றி விரிக்கிற பெருகும். ஆதலின் அதனை விட்டு விடுகிறேன்.

அரிசிப் பங்கீடுமுறை பெரும்பாலும் முக்கியமான பட்டணங்களில் ஏற்படுத்தப் படுகின்றது. பங்கீடு முறை அமுலில் இருக்கும் பட்டணங்களுக்கு தானியம் வாங்கும் ஆபீஸர் மூலம் அரிசி கொடுக்கப்படுகின்றது. சென்னைப் பட்டினத்தில் ஒரு ஆசாமிக்கு 2–1/2 ஆழாக்கும், 2 வயதிலிருந்து 10 வயதுள்ள குழந்தைக்கு அதில் பாதியளவும் கொடுக்கப்படுகின்றது. இந்தப் பங்கீடு முறையால் ஜனங்கள் சிரமத்தை அடைய வில்லை. தங்களுக்குப் போதிய அளவுக்கு மேல் கிடைப்பதாகவே நினைக்கிறார்கள். இப்படி சென்னையில் பங்கீடு முறை ஏற்படுத்தியதன் காரணமாக, மாதம் ஒன்றுக்கு 2,000 டன் நிறை அரிசி மீதம் செய்ய முடிந்தது. ஆகையினால் பங்கீட்டு முறையினால் வீண் செலவழிப்பதைத் தடுப்பதற்கும் சரியான பங்கிட்டு முறையை அனுசரிப்பதற்கும் தக்க வழி ஏற்படுவதோடு, மீதம் செய்து மற்ற ஊர்களுக்கு எஞ்சியதை அனுப்புவதற்கும் வழி ஏற்படுகிறது. அதற்கு வேண்டுவது ஒழுங்கான தட்டுப்பாடில்லாத சப்ளையே யாகும்.

ஆனால் இப்படிப்பட்ட கட்டுப்பாட்டு முறையினால் அதிகம் உற்பத்தி செய்யும் ஜில்லாக்களிலுள்ள மிராசுதார்களுக்கும் வியாபாரிகளுக்கும் என்ன நலம் என்று கேட்கலாம். இப்படி கட்டுப்பாடு திட்டம் வகுப்பதற்கு முன்னால், மிராசுதார்களோ அல்லது உற்பத்தி செய்பவர்களோ வியாபாரிகள் தயவிலேயே இருக்க வேண்டி யிருந்தது. சாமர்த்தியமான வியாபாரி ஆரம்ப காலத்தில் சிறிது விலையைத் தூக்கி வைத்து, பிறகு உடனே விலை குறைந்ததாகக் காட்டி விலை அதிகமாகக் குறைந்து விடுமோ என்ற அச்சங் கொள்ளுமாறு பாவனைச் செய்து, எல்லா நெல்லையும் குறைந்த விலைக்கு வாங்கி, தாங்கள் கட்டுப்பாடு செய்துக் கொண்டு அதிக லாபத்தை அடைந்து வந்தார்கள். தற்காலத்தில் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டால் ஒரே விலை உண்டு பண்ணப்பட்டு, அரசாங்கத்தாருக்கோ அல்லது அரசாங்கத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்ட வியாபாரிக்கோ வேண்டும் போது விற்பதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. நிறுத்து அளவு போட்டு விலை நிர்ணயிப்பதால் மரக்கால் பாய்ச்சி அளப்பதால் ஏற்படும் நஷ்டம் தானியம் உற்பத்தி செய்பவர்க்கும் மிராசுதாருக்கும் குறைந்து விட்டது.

அரிசிப் பங்கீட்டின் நன்மைகள்.

வியாபாரிகளுக்கும் பொருத்தமான லாபத்தோடு, ஒழுங்கான தட்டுப்பாடில்லாத வியாபாரம் ஏற்பட்டுள்ளது. சூதாடுவதில் லாபம் நஷ்டம் இருப்பது போல, வியாபாரத்தில் இருக்கும் என்பதை வியாபாரிகள் இப்போது நினைக்க வேண்டிய அவசியமில்லை. வியாபாரிகள் வாங்கும் காலத்தும், விற்கும் காலத்தும் ஏற்படும் தகராறை முன்னிட்டு, கச்சேரி செல்வதற்கு வழியில்லாது போயிற்று. அரிசியரைக்கும் மில்கள் வேலையில்லாது கிடந்தவை, தற்போது மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித் திருப்பதை யாவரும் அறியலாம்.

ஆதலால் அரசாங்கத்தார் இப்படிப்பட்ட கட்டுப்பாட்டு திட்டத்தை ஏற்படுத்தவில்லை என்று வைத்துக்கொண்டால், உள்நாட்டில் இந்த யுத்தகாலத்தில் சமாதானக் குறைவும், பசிநோயும், ஏழைகட்குப் பஞ்சமும், பொதுவாக மக்களிடத்தில் திடஎண்ணம் குறைந்து, சமாதான வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. தற்காலத்தில் அரசாங்கத்தார் இந்த ஏற்பாட்டைச் செய்ததால், தானியத்தை உற்பத்தி செய்வோரும், அதனை வினியோகம் செய்யும் வியாபாரிகளும், வாங்கியுண்ணும் ஏழை மக்களும் யாவரும் இந்த யுத்த நெருக்கடியில் நிம்மதியாக வாழ முடிகிறது.

சௌகரிய வாழ்விற்கு வழி.

இந்நிலையில் நம் நாட்டு மக்கள் எதிர்காலத்தைச் சற்று நோக்கிப் பார்க்கவேண்டும். தற்காலத்தில் யுத்த முனையில் நம் நாட்டுப் போர்வீரர்கள் மற்றவர்களை விட தைரியத்திலோ வீரத்திலோ குறைந்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்து வருகின்றார்கள். இன்னும் வீரர்கள் பலர் தினம் சேர்ந்து வருகின்றார்கள் செல்வ வந்தர்கள் பலர் தங்கள் செல்வத்தை வெற்றியைத் தேடிச் செல்வோம் என்ற முறையில் அனுப்புகின்றார்கள். போர் முனையில் களைத்து நிற்கும் வீரர்கட்கு வேண்டியதைச் செய்து செஞ்சிலுவைச் சங்கம் புகழ் பெறுகின்றது. உணவுப் பொருளை பெருவாரியாக உற்பத்திசெய்து வேளாளர்கள் பசிப்பிணியைத் தீர்க்க முனைந்துள்ளார்கள். இத்துணை கொண்ட இத்தேய மக்களோடு உலகத்துள்ள நேசதேசத்தார்கள் பலரும் இம்மாதிரியே போர் முனைக்கு உதவி செய்து மேநாட்டிலே ஜர்மானியும் கீழ் நாட்டிலே ஜப்பானும் யுத்த மனப்பான்மையை அடியோடு ஒழித்தாலன்றி உலக சமாதானத்துக்கு வழியில்லை என்று முனைந்து நிற்பதால், வெற்றி நேசதேசத்தாருக்கு நிச்சயம் என்பதில் சந்தேகம் யாருக்கும் இருக்கமுடியாது. மேலே நான் கூறிய முறையில், நம் தேசத்து மக்கள் இன்னும் சிறிது விரைவாக வேலை செய்வார்களேயானால் வெற்றியைச் சீக்கிரமாக ஏற்படுத்தி நம் நாட்டு மக்கள் சௌகரியமாக வாழ வழி தேடுவதற்கு இடமுண்டு என்பதில் ஐயமில்லை.

எதிர் காலத்தில் நம் நாட்டு மக்கள் சௌகரியமாக வாழவேண்டுமானால் இந்த யுத்த காலத்தில் அனுசரிக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு. யுத்தகாலத்தில் கஷ்டங்கள் பல இருந்தாலும் அதன் பலனாக நன்மைகளும் பலவுண்டு. இந்தியாவின் முக்கிய ஸ்தானமும் அதன் பயனும் தற்பொழுது நிலை நிறுத்தப் பட்டுவிட்டது.

உலகில் மற்ற பாகங்களிலுள்ள மக்களின் அறிவின் பயனாகிய எல்லா சாதனங்களையும் நம் நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ‘உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே’ என்பதும் ‘ஊருடன் கூடிவாழ்’ என்பதுமாகிய பெரியோர்கள் வாக்கை அவைகளின் விரிந்த உரையில் நோக்குவார்க்கு, உண்மை விளங்காமல் போகாது.

சிக்கன வாழ்வின் அவசியம்.

தற்கால யுத்தத்தின் பலனாக பணமிதப்பு நாட்டில் இருப்பது என்பதை யாவரும் அறிவர். அந்த பணமிதப்பு யுத்தத்திற்குப் பிறகு எதிர்பார்க்க முடியாது. ஆதலால் நம் நாட்டு மக்கள் எதிர் காலத்தில் சமாதானத்தோடும் சௌகரியமாகவும் வாழ வேண்டுமானால் ‘வெள்ளம் வருமுன் அணை போடு’ என்ற முதுமொழியைக் கைக்கொண்டு, ஆடம்பர வாழ்க்கையை அகற்றி சிக்கனத்தைக் கைகொண்டு. கூடியவற்றை சேமித்து, சேமித்தவற்றைப் பாங்கிகளில் போட்டு, பாங்கிகளிலும் அதிக நம்பிக்கையானதும், இனி அழியாது, அழிவதற்கும் வழியில்லை என்று சொல்லக் கூடியது மாகிய அரசாங்க பாங்கியில் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட், பாண்டுகள், பிரைஸ் பாண்டுகள் முதலியவற்றில் போடுவார்களேயானால், வெற்றியை துரிதப்படுத்தி மக்களுக்குச் சமாதானத்தைச் சீக்கிரமாக கொடுத்தவர்கள் ஆவார்கள் என்பதோடு தங்கள் எதிர்கால நல் வாழ்க்கைக்கும் வழிதேடியவர்கள் ஆவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

—திருச்சி. அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து பிப்ரவரி மாதம் 15-ம் தேதி ஒலி பரப்பப் பட்டதோர் பிரசங்கம்.

யுத்தம் போகிற போக்கு

இப்பொழுது நடக்கும் யுத்தத்திலே எதிர்பாராதது ஏதுமே நடக்கவில்லை. எல்லாம் எதிர்பார்த்ததே நடக்கிறது. நேச நாடுகளின் கை உயரும் வரை அச்சு நாடுகள் அட்டகாசம் செய்யும்; அப்புறம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து அவை உதை வாங்கும் என்று எதிர் பார்த்தோம். எதிர் பார்த்தபடியே நடந்து கொண்டிருக்கிறதா இல்லையா? இத்தாலியின் சர்வாதிகாரியாக இருந்த முஸோலினி, இத்தாலியை அக்ரமமாகப் போரில் கொண்டு சிக்க வைத்த பாபத்திற்காக, தக்க பலனை அடைவார் என்று எதிர் பார்த்தோம். அதுவும் எதிர் பார்த்தப்படியே நடந்து விட்டது. அவர் செய்த அசட்டுச் செய்கையின் பலனை, இத்தாலி இன்று நன்ருக அநுபவிக்கிறது. அங்கு வந்து நன்ருக வேர் விட்டுக கொண்டு விட்டார்கள் ஜெர்மானியர். அவர்கள் லேசிலே இத்தாலியை விட்டுப் போவதாக இல்லை. அவர்களை அங்கிருந்து கட்டாயம் துரத்தியும் ஆகவேண்டும். இத்தாலியை விட்டு விட்டால், யுத்தம் ஜெர்மனிக்குள்ளேயே வந்து விடுமே என்ற பயம் ஹிட்லருக்கு. ஆகவே, 'கொஞ்சமும் விட்டுக் கொடுக்காதீர்கள்! உயிரைக் கொடுத்தாவது இடத்தைக் காப்பாற்றுங்கள்' என்று அவர் உத்திரவு போட்டுக் கொண்டே யிருக்கிறர். யுத்தத்தை ஜெர்மனிகுள் கொண்டு போகாவிட்டால், அது முடியவே முடியாது; அது முடியாவிட்டால், உலகோ நிம்மதியாக தங்கள் தங்கள் வேலைகளைச் செய்ய முடியாது என்பது நேச தேசத் தலைவர்களுக்கு நன்ருகத் தெரியும். அதனுல் தான், அவர்கள் ஆட்சேதம், பொருட்சேதம், கப்பற்சேதம், விமானச் சேதம் எதையும் பொருட்படுத்தாது நேசப் படைகளை முன்னேறும்படி உத்திரவு அனுப்பிக் கொண்டே யிருக்கிறர்கள்.

நாஜிகளுக்கு ஹிட்லரிடம் பயம்

ஹிட்லரிடம் அவரது ஆட்களுக்கு ஏகப் பயம். அந்த பயத்தின் பேரிலும், இப்பொழுது நேச தேசத்தார் அடைந்திருக்கும் நிலைமையை உத்தேசித்தும், பின் வாங்கினுலும் ஆபத்து என்பதை அந்த நாஜிகள் அறிந்திருக்கிறர்கள். ஆகவே, எப்படிப் போனுலும் இழவு என்பதை உணர்ந்த அவர்கள், முன்னேறிப் பாய்ந்து பார்க்கலாம், இல்லாவிடில், இருந்த இடத்திலேயே இருந்து பார்க்கலாம் என்று போராடுகிறர்கள். நாஜிகள் நல்ல பயிற்சி யுடையவர்களாதலாலும், ஏற்கெனவே அவர்கள் எதிர் காலத்தில் நடக்கப் போவதை எதிர் பார்த்தே, எல்லா யத்தனங்களும் செய்து வைத்துக் கொண்டு விட்டார்களாதலாலும், நேசப் படைகளின் முன்னேற்றத்திற்கு பிரமாதமான எதிர்ப்பு இருந்து வருகிறது. அடிக் கணக்கிலும், கஜக் கணக்கிலும் தான் நேசப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. சில இடங்களில் வெறும் வேவு பார்ப்பதோடு திருப்தி யடைய வேண்டி யிருக்கிறது. இதற்குப் பருவ நிலையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கோளாறுகளும் முக்கிய காரணமாகும்.

நேசப் படைகள் இத்தாலியப் போரை சீக்கிரம் முடித்து விடத் தான் விரும்புகின்றன. ரோம் நகரைப் பிடித்து விட்டால், அப்புறம் கொஞ்சம் சிரமம் குறையும் நேச தேசத்தவர்க்கு. ஆனுல் அந் நகரைப் பிடிக்க சிரமப் படும் என்றே தோன்றுகிறது.

ரோமாபுரியைப் பிடிக்கத் திட்டம்

சீக்கிரமே ரோம் நகரை அடைய வேண்டுமென்று தான் சுமார் ஒரு மாதத்திற்கு முன்னுலே, அன்ஸியோ என்ற பிரதேசத் தருகே (இத்தாலியின் மேல் கரையிலே) போய், வெகு துணிச்சலாக நேசப் படைகள் இறங்கின. ஆரம்பத்தில எதிர்ப்பே இல்லை. அதைப் பார்த்த போது, 'சரி! இன்னும் சில தினங்களில் ரோமாபுரி யடைந்து விடுவார்கள்' என்று பலர் எண்ணினுர்கள்.

ஆனுல், ஜெர்மன் சேனுபதி அதி வேகமாகப் பெரிய படை யொன்றைத் திரட்டிக் கொண்டு, புதிதாக அன்ஸியோ பிரதேசத்தில் இறங்கிய நேச தேசப் படைகளை அடித்து விரட்டி, கடலில் கொண்டு போய்த் தள்ளி விட வந்து விட்டார். அவருக்கு விமானப் படை உதவியும் கிடைத்தது. நேசப் படைகளுக்கு மேற் கொண்டு உதவி வருவதற்கு வகையின்றி மழையும், காற்றும் அடிக்கத் தொடங்கின.

ஜெர்மன் படைகள் அதி பயங்கரமாகத் தாக்குகின்றனவாம். சாவு வேகமும் அதிகமாகவே இருக்கிறதாம். நஷ்டமும் அதிகமாம். ஆனுலும ஒரு சிறிது லாபமும் அடையாமலில்லை அவர்கள். ஓரிரண்டு ஸ்தலங்களை அவர் பிடித் திருக்கிறர்களாம். அவர்களது பயங்கரத் தாக்குதல்களைச் சமாளித்துக் கொண்டு, பிடியையும் விடாது போராடும் நேச தேச வீரர்களிடை, இந்தியர்கள் பலரும் இருக்கிறர்களாம்.

'கொஞ்சம் இடத்தை விட்டுக் கொடுக்க நேரிட்டாலும் நேரிடலாம். ஆனுல் அன்ஸியோவிலிருந்து கப்பலேறி ஓடுவது என்பது ஏற்படாது' என்கிறர் ஒருவர். நேச தேசக் கப்பல்களும், விமானங்களும் நாஜிச் சேனைகளைக் கலங்க அடித்துக் கொண்டிருக்கின்றன. தங்கள் பீரங்கி முழக்கத்தாலும், விடாத குண்டு வீச்சாலும, நேச தேச விமானங்கள் வந்து போனதும், நாஜி விமானங்கள் அட்டகாசம் செய்கின்றனவாம்.

லட்சியம் செய்யாது முன்னேறும் 5-ம் படை.

ஐந்தாவது சேனைக்கும் காஸினே பிரதேசத்திலே ஏக எதிர்ப்பு. ஆனுலும், அந்த சேனை எதையும் லக்ஷியம் செய்யாது முன்னேறிக் கொண்டு தானிருக்கிறது. காஸினே நகருக்கு மேலே ஒரு மலை உச்சியிலே சந்நியாசிகள் வசிக்கும் மடாலயம் ஒன்றிருக்கிறது. இல்லை, அதை இப்பொழுது இருந்தது என்று தான் சொல்ல வேண்டும். அதைத் தான நேச தேச விமானங்களும், பீரங்கிகளும் தகர்த்தெறிந்து விட்டனவே!

ஐயோ! சந்நியாசிகள் ஒரு பாவமும் பண்ணி யிருக்க மாட்டார்களே, அவர்களிருக்கு மிடத்தை இப்படி பாழாக்கலாமா என்று கேடகலாம். வெறும் சந்நியாசி மடமாக இருந்தால், பாழாக்கக் கூடாது தான். ஆனுல், அதிலே யாரும் குண்டு வீச மாட்டார்கள் என்பதைத் தங்களுக்குச் சாதகமாக நாஜிகள் உபயோகித்துக் கொண்டு, அந்த மடத்திலே பல பீரங்கிகளையும், இயந்திரத் துப்பாக்கிகளையும் வைத்து, நேச தேசப் படைகளுக்குப் படு சேதம் விளைவித்துக் கொண்டிருக்கும் பொழுதும், நம்மவர்கள் சும்மா இருக்க முடியுமா? கோவில்கள் புனிதமானவை தான். அவற்றைச் சில கொள்ளைக் காரர்கள் தங்கள் இருப்பிடமாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள் என்ருல், அந்தக் கோவிலுக்குள் போலீஸார் போகலாமா? கூடாதா?

இதே போல் தான் ஆயிற்று காஸினேவிற்கு மேலே யிருந்த மடாலயமும். ஆகவே நேச தேசத்தார்கள், அந்த மடாலயத்திலுள்ள சாமியார்களை எச்சரித்து விட்டு, அந்த இடத்தைக் காலி செய்ய, அவர்களுக்குப் போதுமான அவகாசம் கொடுத்து விட்டு, அப்பால் தான் அதைப் பாழாக்கினுர்கள்.

காஸினேவுக்குள் நுழைவு

இது செய்த பிறகு, காஸினே நகருக்குள் நேச தேசப் படைகள் புகுவது சுலபமாகி விட்டது. இந்த நகரத்திலே பல நாட்களாகவே யுத்தம் வெகு கடுமையாக நடந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு கஜமாகத் தான் நேச தேசத்தார் முன்னேறி யிருக்கிறர்கள் இங்கே. ஒவ்வொரு வீட்டைப் பிடிப்பதற்கும் ஒரு கோர யுத்தம் நடந்திருக்கிறது.

இந்த யுத்தத்தைப் பற்றிச் சரித்திரம் எழுதும் பொழுது, இந்த காஸினே யுத்தம் அதிலே நிச்சயம் இடம் பெறும். ரோமிற்குச் செல்லும் பாதையில் உள்ள இந்த இடம் பூரணமாக நம்மவர்கள் கைகளுக்கு வந்துவிட்டால், அது ஒரு பெரிய வெற்றியாகவே இருக்கும். நாஜிகளுக்கு மேற்கொண்டு உதவி வர சௌகரியங்களிருக்கின்றன. நேசப் படைகளுக்கு மேற்கொண்டு உதவி வர சௌகரியங்கள் செய்து கொள்ளப் படுகின்றன. நேச தேசங்களின் கப்பல் பலம் பெருகப் பெருக, நாஜிகளின் முடிவு காலமும் நெருங்கிக் கொண்டே தானிருக்கிறது.

சீமைப் படைகளை அய்சினேவர் பார்க்கிறர்

சீமையிலே, ஐஸன்ஹோவர் துரை, ஐரோப்பா மீது படை யெடுப்பதற்குச் சித்தமாக இருக்கும் படைகளை யெல்லாம் போய் மேற்பார்வையிட்டு விட்டு வந்தாராம். எல்லாம் திருப்திகரமாகவே இருப்பதாகக் கூறுகிறர் அவர். படை யெடுப்பிற்கு வேளை வர வேண்டாமா? ஹிட்லரும் அவரது சகாக்களும் விழ, காலம் வர வேண்டாமா? ருஷ்யாவிலே, செஞ் சேனை வீரர்கள், நேற்று முன் தினம் புதன் கிழமை யன்று, தங்களது சேனை சிருஷ்டிக்கப் பட்டதி லிருந்து இருபத்தாறு வருடங்கள் பூர்த்தியானது சம்பந்தமான விழாவை அதி விமரிசையாகக் கொண்டாடினுர்களாம். வருடா வருடம் இந்த விழா அங்கு கொண்டாடப் படுகிறது. ஆனுல் சென்ற இரு வருடங்களில் இந்த விழாவை அவ்வளவு சிறப்பாகக் கொண்டாட வசதிகள் இல்லாதிருந்தன. ஆனுல், இவ் வருடமோ, செஞ் சேனை வீரர்கள் லெனின்கிராடு, மாஸ்கோ, ஸ்டாலினகிராடு போன்ற பெரிய நகரங்கள் எல்லாம் நாஜிகளிட மிருந்து மீட்கப்பட்டு விட்டன. மேலும் மேலும் வெற்றிகள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. லெனினகிராடி லிருந்து புறப்பட்ட செஞ் சேனை வீரர்கள், புயலினும் வேகமாக முன்னேறிய வண்ண மிருக்கிறர்கள். சென்ற இரண்டு வருடங்களாக ஸ்ட்ராயா ரூஸா என்ற முக்கியமான நகரம் ஜெர்மானியர் வசமே இருந்து வந்திருக்கிறது. முனனெரு தடவை கூட இதை வளைத்துக் கொள்ள ருஷயர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். ஆனல் நாஜிகள் வசம் இருந்து விட்டது அற்ப அதிருஷ்டம். ஆனுல், இப்பொழுது செஞ் சேனை வீரர்கள் இந்த நகரை சுற்றி பிடித்துக் கொண்டு, வேறு இடங்கள் மீது தங்கள் கவனத்தைச் செலுத்த முயன்றனர். இரண்டு செம் படைகள் இந்த் நகருக்குள் புகுந்தன. உடனே இந்த நகரைக் காலிசெய்து விட்டதாக ஜெர்மன் ரேடியோ அறிவித்தது. ஆனுல் உண்மையில் நடந்தது, நாஜிகள் உதை வாங்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தது தான்.

விழுகிற அடியினுல் ஓடிய நாஜிகள்

அடுத்தாற் போல, கிரிவாய் ராக் என்ற தொழிற்சாலை நகரத்தின் மீது ருஷ்யர்களது கவனம் சென்றிருக்கிறது. இதிலே ஏராளமாக இரும்பு கிடைக்கிறது. இதை விடக்கூடாது என்றுதான் பார்க்கிறர்கள் நாஜிகள். ஆனுல் இது அவர்கள் பாட்டன் ஒழுங்காகச் சம்பாதித்த சொத்தா என்ன? விழுகிற அடியில், கக்கி விட்டு ஓடிவிட்டார்கள் அந்த நகரை, அந்த அயோக்கிய நாஜிகள்!

டினீப்பர் நதி வளைவிலே, லக்ஷக்கணக்கான ஜெர்மன் படைகள் சிக்கிக் கொண்டு விட்டன. அவற்றைச் சரணடையும்படி ருஷ்ய சேனுபதிகள் எவ்வளவோ கேட்டுக் கொண்டார்கள். கேட்டால் தானே? ஏதோ பைத்தியம் பிடித்தவர்கள் போல நாஜிகள் போராடினுர்கள். விமானங்கள் மூலமாகப் பலரை வெளியேற்ற யத்தனித்தார்கள், சிலர் தப்பவும் செய்தார்கள், சிலர் கூண்டோடு கைலாசம் போகவும் போனுர்கள், ருஷ்ய குண்டுகள் பட்டு, ஐம்பதாயிரம் ஜெர்மன் வாலிபர்கள் யமனுலகு சேர்ந்தார்கள். ஏராளமான சாமான்கள் ருஷ்யர்களுக்குக் கிடைத்தன. ருஷ்யப் போரில் இம்மாதிரி எத்தனையோ இடங்களில் நாஜிகள் தாரை வார்த் திருக்கிறர்கள்.

நேச தேச நீர் மூழ்கிகள் அச்சு நாட்டுக் கப்பல்களில் பலவற்றை நீருக் கடியில் போகச் செய்திருக்கின்றன. நேச தேச விமானங்கள் பெர்லின் நகரை துவம்சம் செய்து கொண்டிருக்கின்றன. ஆயிரக் கணக்கான விமானங்கள் அடிக்கடி போய், ஆயிர ஆயிரம் டன் கணக்கில் வெடி குண்டுகளை உதிர்த்துவிட்டு வந்தால், முழுவதும் இரும்பாலே ஆகிய நகரானுலும் உருவாக இருக்குமா? அதனுல் தான் பெர்லின் நகரில் முக்கால் வாசி பாழாகி விட்டது.

ஜப்பான் வெளி அரண்கள் பிடிபட்டன

அமெரிக்கப் படைகள் பஸிபிக் பிரதேசத்திலே வெகு மும்முரமாக வேலை செய்துகொண் டிருக்கின்றன. ஜப்பானின் வெளி அரண்களில் சிலவற்றை, வெகு சாமர்த்தியமாக அப் படைகள் தாக்கிப் பிடித்திருக்கின்றன. ஜப்பானின் முக்கிய கடற் படை ஒன்றை அமெரிக்கக் கடற் படை ஒன்று

(10-ம் பக்கம் பார்க்க)

'கொசு'வைக் கண்டு அலறல்

'இழக் காசியாவிலே, எல்லோருக்கும் மேலாக இருந்து ஆளக் கூடிய திறமை எங்கள் ஒருவருக்கு மட்டும் தானிருக்கிறது. நாங்கள் மகா வல்லமை பொருந்திய அமெரிக்காவை மட்டுமல்ல, இந்த உலகத்திலே பெரும்பாலோராக உள்ள நேச தேசத்தாரையும் பகைத்துக் கொண்டு, எதிர்த்து நின்று சமாளிப்போம். நாங்கள் எதற்கும் அஞ்ச மாட்டோம்' என்று ஜப்பானியர்கள் ஜம்பமடித்துக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்த காலத்திலே, அவர்கள், திருடர்களைப் போல் பல இடங்களிலே புகுந்து, அந்த இடங்களை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டனர்.

நிம்மதி இருக்குமா ?

நியாயமான சம்பாத்தியம் என்றால் அதை வைத்துக் கொண்டு பகிரங்கமாகவும், சுகமாகவும், மன நிம்மதியோடும் வாழலாம். ஆனால் ஒருவன் லஞ்சம் வாங்குகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு மன நிம்மதி இருக்குமா? கையிலே ஆயிரக் கணக்கிலே பணம் இருந்தாலும், விலையுயர்ந்த சாமான்களை வாங்கவோ, ஆடம்பரமாக வாழவோ, முடியுமா ?

''நேற்று வரை மூலையில் கிடந்தவனுக்கு, இன்று திடீரென எங்கிருந்து வந்தது இந்த வாழ்வு. புதையல் ஏதாவது கிடைத்ததா ? இல்லா விட்டால், எங்கேயாவது கொள்ளை யடித்துக் கொண்டு வந்தானா ?'' என்று தானே கேட்பார்கள். ஆகவே, அவன் எப்பொழுதுமே மனநிம்மதி யில்லாமல், அதுகாரணமாகத் தூக்கமு மில்லாமல் தானிருப்பான். அவன், தன் வீட்டிலே யாரையும் சேர்க்க மாட்டான்.

சாமர்த்தியத் திருட்டு, ஆனால்....!

லஞ்சம் வாங்கினவனை விட மோசமான வாழ்வு வாழ்வான் கொள்ளை யடிப்பவனும், திருடுபவனும். ரொம்பச் சாமர்த்தியமாகக் கொள்ளை யடித்திருந்தாலும், திருடி யிருந்தாலும், கொஞ்ச காலம் வரை வயிறு வாடாதிருக்கலாம். அதற்கு மேல் அவன் அதிக சுகம் காணமுடியாது. திருடிய பொருளை எவ்வாறு விற்பது, எங்கே விற்பது, யாராவது பார்ப்பார்களோ, சந்தேகிப்பார்களோ என்ற கவலை அவனைப் பிடுங்கித் தின்று கொண்டே யிருக்கும். கடைத் தெருவிலே குஷாலாகப் போனான் என்ற பேச்சு உண்டா? அதேது? ''டேய்!'' என்று யாராவது யாரையோ கடைத் தெருவிலே அழைத்தால் போதும். மேலே குறிப்பிடப்பட்ட திருட்டு ஆசாமி, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்ப்பான். இப்படியே இருந்து என்றோ ஒரு நாள் அகப்பட்டுக் கொள்ளுவான். அப்பொழுது சம்பிரமமாக பூசை கொடுத்து, சர்க்கார் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைத்து, அவன் கொட்டத்தை அடக்குவார்கள்.

ஜப்பான்காரன் செய்த வேலை

இந்தக் கோஷ்டியாரில், ஜப்பான்காரன் செய்த வேலை, இந்த சாமர்த்தியத் திருடன் காரியத்தை நிகர்த்த தாகும். உலகோர் எல்லாம் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த பொழுது, ஜப்பானியக் குள்ளன், எங்கே திருடலாம் என்று பஸிபிக் மகா சமுத்திரப் பிரதேசங்களிலும், பர்மா, மலேயா, சிங்கப்பூர் பகுதிகளிலும், மேற்கு அமெரிக்காவிலும் வளைய வந்து கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டிருந்திருக்கிறான். ஏதோ வியாபாரம் செய்யப் போவது போலவும், மீன் பிடிக்க கிளம்புவது போலவும், ரப்பர், தேயிலைத் தோட்டங்களை உற்பத்தி செய்வது போலவும், கூலி வேலை செய்வது போலவும், வெளி நாடுகளில் போய்க் குடி யேறி, உளவறிந்து வந்திருக்கிறார்கள்.

அந்த நாட்டவர்கள் எல்லாம் முழித்துக் கொள்ளுவார்கள் போலிருந்தது. இனியும் காலம் கடத்தக் கூடாது என்று கிழக்கத்திக் குள்ளன் தன் வேலையைக் காட்டத் தொடங்கி விட்டான். சென்ற இருபது வருஷ காலங்களில், அவன் தனது கடற்படை பலத்தைத் ஏகமாக உயர்த்திக் கொண்டிருந்தான். ட்ருக் என்ற இடத்திலே, அதுதானய்யா, இப்பொழுது அமெரிக்கர்கள் அடித்து நொறுக்கிப் பிடித்து விட்டார்களே, 'அந்த மத்ய பஸிபிக் பிரதேசத்திலே, ஜப்பான் பெரியதோர் கடற் படையைக் கொண்டு வைத்துக் கொண்டான். அந்த இடத்தைப் பார்க்கவே எந்த வெள்ளையருக்கும் அனுமதி கொடுக்க வில்லை அவன். அவனை அப்பொழுது யாரும் சந்தேகிக்க வில்லை. அதனால் யாரும் அங்கே போய்ப் பார்க்க முடியவில்லை.

தப்ப முடியா தென்ற அச்சம்

இவ்வாறாக ஆங்காங்கே பசை வைத்துக் கொண்டு தன் சக்தியையும் மறந்து, வெகு தூரம் சென்று விட்டான் அவன். பேராசைப் பேய் கழுத்தைப் பிடித்துத் தள்ளிய வேகத்திலே, இப்பொழுது ஜப்பானியத் திருடனை, இந்தக் குள்ளக் கொள்ளைக்காரனை எல்லோரும் தட்டிக் கேட்கத் தொடங்கி விட்டார்கள். பதுங்குகிறான். தலை மறைந்தும் மிரட்டுகிறான். அவனை ஒரே யடியாக ஒழித்தே தீரவேண்டு மென்று உலகோர் தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் ஒன்று சேருவதைக் கண்டு, ஜப்பானியனது மனம் நடுங்குகிறது. இனித் தப்ப முடியாது என்ற நினைவு மெல்ல மெல்ல அவனுக்குத் தோன்றத் தொடங்கி யிருக்கிறது. பல வருஷக் கணக்கிலே பலே போக்கிரியாக இருப்பவனை ஒரே நாளில் அடிக்க முடியுமா? அவனுக்குக் கையாள் யார், எங்கிருந்து வருகிறது அவனுக்கு உதவி, என்பதை யெல்லாம் கண்டு பிடிக்க வேண்டாமா? அந்த வெளி உதவிகளையும், கையாள்களையும் தடுத்தொதுக்கி விட்டால், போக்கிரியை அடக்குவது அப்புறம் சிரமமல்ல. அதே போல, ஜப்பானின் வெளி சக்தியை நேச தேசத்தார் சிறிது சிறிதாக ஒடுக்கிக் கொண்டு வருகிறார்கள்.

இது காரணமாக, நேற்று வரை வெட்டி ஜம்பமடித்துக் கொண்டிருந்த ஜப்பானியர், இன்று அதிகமாக வாயடி அடிப்பதில்லை. அவர்கள் திருடர்கள், தங்கள் வசப்பட்ட நாடுகளில் அவர்கள் செய்யும் அக்ரமங்கள் கொஞ்ச மல்ல; கிழக் காசிய சுபிக்ஷ உலகத்தைச் சிருஷ்டிக்கவே நாங்கள் போராடுகிறோம் என்று ஜப்பானியர் சொல்லுவ தெல்லாம் வெறும் வாய்ப் பந்தல்; அவர்கள் ஈவிரக்க மற்ற பாவிகள் என்பது எல்லா நாட்டினருக்கும் தெரிந்து விட்டது. ஆகவே எவரும் ஜப்பானின் பேச்சுக்கு மதிப்பே வைப்பதில்லை. அது தவிர ஜப்பானியரின் செய்கைகளைக் கண்டு, சிரி சிரி என்று சிரிக்கிறார்கள்.

'கொசு'க்களின் கதிகலக்கும் சக்தி

''உச்சி மீது வானிடிந்து வீழ்ந்தாலும் கலங்கா உள்ளத்தினர் ஜப்பானியர்'' என்று பலரும் நினைத்திருந்த காலம் மாறி விட்டது. ''கொசு''க்களைக் கண்டு பயப்படும் காலம் வந்து விட்டது. ''கொசு வருகிறது'' என்ற தகவல் வந்ததுமே ஜப்பானியர் பதுங்குகிறார்களாம். அந்தக் ''கொசு''க்களின் சக்தியைக் கண்டு கதி கலங்குகிறார்களாம். பர்மா எல்லையிலே இருக்கும் ஜப்பானியர் தான் தற்சமயம் இந்த அவஸ்தைக் குள்ளாகி யிருக்கிறார்களாம். அவர்களை, ''கொசுக்கள்'' கூட்டம் கூட்டமாகச் சென்று தாக்குகின்றனவாம்.

''பர்மா எல்லையிலே இருப்பதாகக் கூறப்படும் மலேரியா கொசுக்களைப் பற்றிக் கூறுகிறீர்களா? அவை மகா சக்தி வாய்ந்தவை தான். உலகத்திலேயே மிகப் பெரிய பீரங்கியைச் சுடும் வீரனும் இதனால் தாக்கப்பட்டு விட்டால், கடுமையான மலேரியா ஜுரம் கண்டு, வலுவற்று, நிற்கவும் சுகமற்று ஆஸ்பத்திரி யாத்திரை போக வேண்டி வந்து விடுகிறதாம். ஆனால் இந்தக் கொசுக்கள் பிரிட்டிஷ், அமெரிக்க, தென் ஆபிரிக்க, சீன, இந்தியப் படைகளையும் தான் கடிக்கக் கூடுமல்லவா? அப்படி இருக்க ஜப்பானியர் படும் கடியை மட்டும் எடுத்துச் சொல்லுவானேன்? என்றும் கேட்கலாம். சரியான கேள்வி.

நாம் இங்கே குறிப்பிட விரும்பினது ஈஸ்வர சிருஷ்டியான கொசுக்களைப் பற்றி அல்ல. சீமையிலிருந்து தயாராகி, ஜெர்மனியில் உள்ள பல க்ஷேத்திரங்களையும் தரிசித்து விட்டு. ''கொடிது! கொடிது'' என்ற புகழ் மாலைகளைச் சம்பாதித்துக் கொண்டு, பர்மா முனையில் உள்ள ஜப்பானியரின் உயிரை வாங்க வந்த ''கொசுக்கள்'' என்று சொல்லப்படும் புது ரக விமானங்களைப் பற்றித் தான்.

இந்த ''கொசு'' ரக விமானங்கள் முழுவதும் மரத்தாலாகியவை. சீமையிலே மர வியாபாரிகள் நிறைந்துள்ள பிரதேசங்களில் எல்லாம் இவை தயாராகின்றன. இரண்டு வருஷங்களுக்கு முன் வரை டேபிள், பெஞ்சு, நாற்காலிகள் தயாரித்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் இன்று இந்த ''கொசு''க்களை சிருஷ்டித்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு அமெரிக்காவி லிருந்து, அத்யற்புதமான பாக்கார்ட் ரோல்ஸ் ரெய்ஸ் எஞ்சின்கள் வருகின்றனவாம்.

'கொசு' விமானத்தின் தன்மை

மணிக்கு நானூறு மைல் வேகத்திலே போகும் இந்த விமானங்கள் வெகு லேசாக இருப்பதால், இவற்றிலே வெடி குண்டுகளும் ஏற்றிப் போக முடிகிறது. இரண்டு எஞ்சின்கள் உள்ள விமானமிது. அதிக ஆராய்ச்சி யில்லாமலே அவசியத்தைக் கருதி சட்புட் என்று தயாரிக்கப் பெற்றது இது. விமான உற்பத்தி சாலைகளுடன் சிறிதும் சம்பந்த மற்ற சிறு கம்பெனிக்காரர்கள் பலர், இந்த ''கொசு' உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பர்மா முனையிலே, இது சில இடங்களில் தரை மட்டத்திற்கு 25 அடி உயரத்தில் கூடப் பறந்து, ஜப்பானியரை சின்னாபின்னப் படுத்துகிறதாம். இதிலே நான்கு பெரிய பீரங்கிகளும், நான்கு இயந்திரத் துப்பாக்கிகளும் இருக்கின்றனவாம். இதில் உள்ள இயந்திரங்களைக் கழற்றி விட்டால், இதைப் போல் வேகமாகச் செல்லக்கூடிய விமானம் இவ்வுலகிலேயே கிடையாது என்று சொல்லலாமாம். இருவர் இருந்து ஓட்டலாமாம் இதை.

பர்மா மட்டுமன்றி, தாய்லாந்தில் சில இடங்களையும் இந்த விமானங்கள் ஒரு கை பார்த்திருக்கின்றனவாம். பர்மாவில் தான் ஏராளமான ஆறுகள் ஆச்சே! அந்த ஆறுகளிலே யுத்தத்திற்குத் தேவையான பொருள்களைப் பல படகுகள் சுமந்து செல்லுகின்றனவாம். அவற்றை இந்தக் ''கொசு''க்கள் ஹதம் செய்து வருகின்றனவாம். இப்படிப்பட்ட ''கொசு''க்களைக் கண்டு ஜப்பானியர் நடுங்காமல் இருக்க முடியுமா? பின்னால் என்ன வருமென்று தெரியாமல், இப்பொழுதே ஜம்பமடிக்கப் படாது என்ற பாடத்தை இனியாவது ஜப்பான்காரன் தெரிந்து கொள்வானா?

வானொலி நாட் குறிப்பு.

திருச்சி.—பிப்ரவரி மாதம் 29-ம் தேதி மாலை 7-15 மணிக்கு திருச்சி யுத்தக் கமிட்டியார் ஏற்பாடு செய்திருக்கும் 'நாமும் யுத்தமும்' என்ற பேச்சு.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

வனுச் சண்டைக்கு இழுத்திருக்கிறதாம். அந்த ஜப்பானிய கடற் படை சிதைந்து போனால், மத்ய பஸிபிக்கிலே ஜப்பானியரது வாலாட்டம் குறைந்து போகும். அமெரிக்கர்கள் ஜப்பானை இன்னும் கொஞ்சம் நெருங்கியவர்க ளாவார்கள்.

பஸிபிக் பிரதேசத்திலே மற்றொரு இடத்திலே, ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள் சில, யுத்தக் கப்பல்களின் பாராவோடு எங்கோ போய்க் கொண்டிருந்தனவாம். அவற்றை மடக்கி, அத்தனையையும் அரோஹரா ஆக்கி விட்டனவாம், அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த கப்பல்களும், விமானங்களும். இவ்வாறு நஷ்டத்திற்கு மேல் நஷ்டமாக வந்துகொண்டே யிருந்தால், ஜப்பான் தான் எவ்வளவு நாள் தாக்குப் பிடிக்கும்? அதன் சிருஷ்டி சக்தியின் அளவு இனி உயருவதற்கில்லை. ஆனால் அமெரிக்க நேச தேசத்தின் உற்பத்தி சக்தியின் பெருக்கிற்கு ஒரு எல்லையே இராது. இந்த இரு சக்திகளில் எதற்கு இறுதியில் வெற்றி கிடைக்கும் என்று சொல்லுங்களேன் பார்க்கலாம். இதற்கு உங்களுக்கு பிரமாத ஜோஸியம் தெரியவேண்டுமோ என்ன? இறுதி வெற்றி நேச தேசத்தவர்க்கே தான்.

அரிசி உண்பவர்களுக்கு ஓர் வேண்டுகோள்

(டி. எஸ். சங்கரன்.)

உலகில், 70 கோடி மக்கள், அதாவது ஏறக்குறைய ஜனத்தொகையில் பாதிக்குமேல் அரிசியை முக்கிய உணவாகக் கொண்டிருக்கின்றனர். அவ்வுணவின் தன்மைகளைப் பற்றிப் பல பெரும் ஆராய்ச்சிகள், சென்ற 20 வருடமாக அறிஞர்களால் செய்யப்பட்டு பல உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

நெல்லினின்று அரிசியைப் பிரிக்கக் கையால் உலக்கை கொண்டு குத்தலாம்; அல்லது இயந்திரத்தில் அறைக்கலாம். இவ்விருவகையால் பிரிபடும் அரிசியில் பல வேறுபாடுகள் இருக்கின்றன.

உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதமும் (proteins) சக்தியைக் கொடுக்கும் கொழுப்பும் (fats) அரிசியில் மற்ற தானியங்களைவிடக் குறைவாக இருக்கின்றன. அது போல் வைடமின் சத்தும் மிகக் குறைவே. எனவே அரிசியை மட்டிலும் பிரதான உணவாகக் கொள்ளும் மக்களிடத்து மற்ற தானிய வகைகளைச் சாப்பிடும் ஜனங்களிடம் காணாத பல நோய்கள் காணப்படுகின்றன.

அரிசியின் மேல்புறத்தில் உமிக்கு அடுத்து உள்ளே உயிர்ச் சத்துள்ள வைடமின் படலமும், ஓரத்தில் முளையும் உண்டு. இயந்திரத்தில் அறைத்துத் தீட்டப்படும் பொழுது இந்த உயிர்ச் சத்துப் பொருளும் முளையும் அறவே விலக்கப்படுகின்றன. எனவே இத்தகைய இயந்திரத் தீட்டரிசியில் ஏற்கனவே உள்ள சிறிதளவு சத்துப் பொருளும் நீக்கப்பட்டு சக்கைமட்டும் எஞ்சி நிற்கிறது. இதனால் இயந்திரத்தில் தீட்டப்பட்ட பச்சரிசியை உண்பவர்களுக்குப் பல பிணிகள் வரக் காரணமாகிறது. உடல் நலமும் குன்ற வழியாகிறது.

ஆனால் வீட்டில் உரலில் உலக்கையால் குத்தப்படும் கைக்குத்தலரிசியில் மேலே சொன்ன உயிர்ச் சத்துப் படலத்தில் கால்பங்கு தான் நீக்கப்பட்டு பெரும்பாலும் அரிசியிலேயே தங்குகிறது: முளையும் அநேகமாக நீக்கப்படுவதில்லை. ஆகையால் இயந்திரத் தீட்டரிசியைக் காட்டிலும், கைக்குத்தரிசியில் உயிர்ச் சத்தும் உணவுச் சத்தும் அதிகம்; அது சாலச் சிறந்தது.

பலர் நெல்லை நீராவியில் புழுக்கி உபயோகிக்கின்றனர். அவ்வாறு புழுக்கும் பொழுது உள்ளே இருக்கும் அரிசி கால் பதத்தில் வெந்து, வைடமின் படலத்திலுள்ள உயிர்ச் சத்துப் பொருளும், மற்ற உணவுச் சத்தும் வெப்பத்தால் தானியத்திற்குள் பரவி விடுகின்றன. இதனால் புழுங்கிய நெல்லை இயந்திரத்தில் அரைத்தாலும், பச்சரிசி போலில்லாமல் உயிர்ச் சத்துப் படலம் நீக்கப்படுவதில்லை. உமி மட்டிலும் களையப்படுகிறது. எனவே பச்சரிசியைக்காட்டிலும் புழுங்கலரிசியே சாலச்சிறந்ததென அறிஞர்கள் பல ஆண்டுகள் செய்த சிறந்த ஆராய்ச்சியின் முடிவான உண்மை. இதை நாம் நன்கு கவனிக்க வேண்டும்.

மேலே கூறிய அரிசியின் மேல் உயிர்ச் சத்துப் படலத்தில் இரும்பு முதலிய தாதுப் பொருள்களும் இருக்கின்றன. நம் இரத்தத்திற்கு ஜீவாதாரமாக இருப்பது இரும்பு. அதனாலும் பச்சரிசியைக் காட்டிலும் புழுங்கலரிசி மேன்மை என்று முடிவு கூறலாம்.

மற்றும் சோளம், ராகி, சாமை, கம்பு முதலியவைகளில் அரிசியைக் காட்டிலும் அதிக அளவில் வைடமின் சத்தும், உஷ்ணப் பொருளும் புரதமும் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆகையால் தற்கால அரிசிப் பஞ்சத்தை உத்தேசித்தாவது மக்கள் கூடிய மட்டிலும் அரிசியின் அளவைக் குறைத்து சோளம், கம்பு, ராகி முதலிய தானியங்களை அதிக அளவில் உபயோகிப்பது மிகவும் நலமானது. ஏனெனில் இத்தானிய வகைகள் எல்லா இடத்தில் பயிராகக் கூடியன. எளிதில் பெருவாரியாகக் கிடைக்கின்றன. ஆகையால் இச்சந்தர்ப்பத்தில் அவைகளை எல்லாரும் பயன்படுத்த வேண்டும்.

இவைகளைத் தவிர, வைடமின், தாதுப் பொருள்கள், உப்புகள், எண்ணெய்ச் சத்துகள் அதிகமாகக் கொண்ட உள் நாட்டுக் காய் கறிகள், கீரை வகைகள் பழ வகைகள், கொட்டைகள் இவைகளையும் பெருவாரியாக நாம் உணவுப் பொருள்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் உடல் நலத்திற்குத் தேவையான பல இரசாயனப் பொருள்கள் நம் தேகத்தை யடைந்து நம் உடல் நலத்தையும் மனோ திடத்தையும் வளர்ப்பனவாக ஆகும் என்பது திண்ணம்.

ஆதலால் மக்கள் அதிக அளவில் புழுங்கலரிசியையும், அத்துடன் சோளம், கம்பு, ராகி, சாமை இவைகளையும், காய்கறி, கீரை, பழ வகைகளையும் அதிக அளவில் பயன்படுத்தி உடல் நலத்தையும், அதனால் தேச நலத்தையும், யுத்த நலத்தையும் தேமொறு வேண்டப்படுகின்றனர்.

“ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல்” உருமாற்றம்

பிரயாணிக் கப்பல் வைத்தியக் கப்பலானது

ஒரு கப்பல் ஜனங்களை ஏற்றிக் கொண்டு போய் வரும் கப்பலாக இருந்தது. இப்போதும் அப்படித் தான் அது இருக்கிறது. என்றாலும், அது தன் புது வேலையை மேற் கொள்ளுவதற்கு முன்னதாக, சில அடிப்படையான மாறுதல்களுக்கு உள்ளாக வேண்டியது அவசியமாயிற்று. மேல் தளம் மூடப்பட்டது. அங்கே, வசதியான பச்சை நிறமுள்ள இரும்பு அறைகளை அமைத்தார்கள். பல வகை வைத்திய இலாக்காக்களையும் வெகு விரைவாக முன்னெச்சரிக்கையில்லாமலேயே அமைத்தார்கள். ஒரு சத்திர சிகிச்சை சாலை, நோய்கள் சம்பந்தமான ஆராய்ச்சி சாலை, முதலியவை வெகு விரைவில் ஏற்பட்டன. உண்மையிலேயே அதை முழுதும் மாற்றியமைக்கும்படி நேர்ந்தது. இப்போது அதை அடையாளமே தெரிந்து கொள்ளக் கூடவில்லை. அந்தக் கப்பல் எப்படி உரு மாறியதோ, அதுபோலவே, அதிலிருந்த உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் தமக்கேற்பட்டிருக்கும் புதிய வேலைக்கு ஏற்றபடி தங்களை மாற்றிக் கொண்டார்கள்.

அந்தக் கப்பலில் நோயாளிகளும் காயப்பட்டவர்களும் ‘டோலி’களில் ஏற்றப்பட்டார்கள். தாமாகவே சிலர் நடந்து வந்து ஏறினார்கள். அன்றியும் வைத்தியர்களும் அவர்களுடைய உதவியாளரும் கூட வந்து ஏறினார்கள். இவர்கள், அக்கப்பலுக்கு இன்றியமையாதவர்களாகி விட்டார்கள். அந்தக் கப்பல் ஒரு மிதக்கும் வைத்தியசாலையாக மாறிவிட்டது. அவர்களுக்கு அங்கே இடம் கொஞ்சந் தான். என்றாலும் அவர்களுக்கு அங்கே ருசிகரமான வாழ்க்கைக்கு இடமிருந்தது. அவர்கள் மகிழ்ச்சியோடிருந்தார்கள். தம் நோயாளிகளும் மகிழ்ச்சியோடிருக்கத் தக்கனவெல்லாம் செய்தார்கள்.

அதிர்ஷ்ட சாலிகள்

இந்த உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் சேர்ந்து ஏறக்குறைய 300 பேர்கள். இவர்களில் சிலர் அதிர்ஷ்டசாலிகள். இவர்கள் தம் கப்பல் வாழ்க்கையில், வசதியாகத் தம் கப்பல் புத்தகசாலையினின்று ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, தம் படுக்கையில் சுகமாகப் படுத்துக் கொண்டே படிக்கிறார்கள். மற்றும் சிலர், மேல் தளத்திலுள்ள நடமாடக் கூடிய நோயாளிகளுடன், நல் வார்த்தை பேசிப் பொழுது போக்குகிறார்கள்.

அவர்களில் மிகப் பெரும்பாலோர் கப்பற் பிரயாணத்தில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறார்கள். இராணுவ வைத்தியசாலைகளிலுள்ள நிலைமைக்கும், இங்குள்ள நிலைமைக்கும் வேற்றுமையுண்டு. உங்கள் நிலைமையைக் குறித்து வைத்தியர்களும் ‘நர்சு’களும் என்ன தான் சொன்ன போதிலும், ஒரு வைத்தியசாலைக்குக் கொண்டு போகப் படு முன்பு கப்பலில் தான் இருக்கிறீர்கள்.

இரண்டு வகை மாற்றங்கள்

அதை ஒரு வைத்தியக் கப்பலாக மாற்றிய பிறகு, இரண்டு வகை மாற்றங்கள் அதில் காணப்படுகின்றன. அதிலிருந்த பீரங்கிகள் இப்போது அப்புறப் படுத்தப் பட்டன. முழுதும் இருண்டிருந்த அக் கப்பலில், இப்போது விளக்கொளி பளிச் சென்று வீசுகிறது. அதன் வெள்ளை நிறப் புகைப்போக்கியின் மீதும், பக்கங்களிலும், செஞ்சிலுவை பெரியதோர் படமாக வரையப் பட்டிருக்கிறது. விளக்கொளியும் நன்றாக வீசத் தக்கபடி ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. அதன் சன்னல்களின் வழியாகவும் ஒளி வெளியே வீசி, அதன் பச்சை நிற ஓரங்களைப் பகட்டுகிறது. சமாதான காலத்தில் கப்பல் எவ்வளவு ஒளியோடு போகுமோ, அது போலவே இப்போதும் போகிறது. இராக் காலங்களில் கப்பல் ஓரங்களிலெல்லாம் பச்சைவிளக்குகள் வெளிச்சந்தருகின்றன. தான் தளவாடம் எதையும் ஏற்றிப்போகவில்லையென்று எதிரிகளுக்குத் தெரிவிக்கும் பொருட்டுத் தான், இந்த ஏற்பாடுகளெல்லாம். இப்படியே பயங்கரமான கடலில் அது கடந்து செல்லுகிறது.

அது மகத்தானதோர் சிறிய கப்பல். இன்னும் பல கப்பல்களும் இது போலக் கிளம்பியிருக்கின்றன. அதன் பெயரென்ன தெரியுமா? அது தான் ‘ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல்.’

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

பிப்ரவரி 16.—யுத்தம் ஆரம்பித்ததி லிருந்து நேற்றிரவு பெர்லின் நகரம் தாக்கப்பட்டது போல இது வரை தாக்கப்பட்டதே கிடையாது. 1,000 நேச நாட்டு விமானங்கள் 2,500 டன் வெடி குண்டுகளை உதிர்த்தன.

ஈராக்கும் அபிசீனியாவும் சுயேச்சை யான நாடுகளென்றும் அவற்றின் உள் நாட்டு விவகாரங் களைப் பற்றிய பொறுப்பு தனக்கில்லை யென்றும் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

பிப்ரவரி 17.—அட்லாண்டிக் பிரகடனம் அச்சு நாடுகளுக்குப் பொருந்தாது என்று மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் அறிவித்தார்.

பிப்ரவரி 18.—நேச நாட்டுப் படைகளின் மகா தலைவரான ஜெனரல் அய்சினோவரும், அவருடைய உத்தியோகத் தலைவரான லெப்டினென்ட் ஜெனரல் பி. ஸ்மித்தும் மாட்சிமை பொருந்திய மன்னர் பிரானை பக்கிங்ஹாம் அரண்மனையில் பேட்டி கண்டார்கள்.

பிப்ரவரி 19.—எதிரியின் 25 கப்பல்களை நேச நாடுகளுக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டன வென்று கப்பற் படைத் தலைமைக் காரியாலய அறிக்கை கூறுகிறது.

பிப்ரவரி 22.—யுத்தத்தைக் குறித்து காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் ஒரு அறிக்கை விடுத்தார்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

பிப்ரவரி 16.—உள் நாட்டிற் கென்று இருப்பு வைத்திருந்த எண்ணெயை எல்லாம் யுத்தம் காலி செய்து விட்டது என்று, ட்ருமன் செனட் கமிட்டியார், காங்கிரசுக்குத் தம் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

'சமாதானத்தை ஏற்படுத்தவும், உலகத்தில் எதிர் காலத்தில் நிலையான ஒரு வாழ்வைத் தரவும் வகுக்கப்பட்டிருக்கும் திட்டத்தின் ஒரு பகுதி தான், இராணுவ வெற்றி யடைதல்' என்று மிஸ்டர் கார்டெல் ஹல், பிரதிநிதிகள் சபையின் அப்ரோப்ரியேஷன் கமிட்டியார் முன் குறிப்பிட்டார்.

பிப்ரவரி 18.—ஐரோப்பிய நாடுகளை யடுத்த சமுத்திரத்தில் நேச நாட்டுப் போக்கு வரவுக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் அதிலிருந்து 1,000 பேர் மீட்கப்பட்டதாயும் 1,000 பேர்கள் காணாமற் போனதாகவும் அமெரிக்க கப்பற்படை இலாக்கா அறிவிக்கிறது.

பிப்ரவரி 19.—ஜெனரல் அய்சினோவர், லெப்டினென்ட் ஜெனரல் கார்ல் ஸ்பாஸ், மேஜர் ஜெனரல் ப்ரெட்ரிக், லெப்டினென்ட் ஜெனரல் ஈரா ஈக்கர் ஆகியோருக்கு ரஷ்யா, இராணுவ கௌரவங்கள் வழங்கி யிருக்கிறது.

பிப்ரவரி 20.—சோவியத் அரசாங்க ஸ்தானிகர் எம். ஆண்ட்ரெய் கொமிகோ, மிஸ்டர் ரூஸ்வெல்ட்டுடன் கலந்து பேசினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

பிப்ரவரி 16.—அரசாங்க சபையில் மேன்மை தங்கிய பிரதம படைத் தலைவர், இன்று செய்த தோர் பிரசங்கத்தில், யுத்த நிலைமையைக் குறித்தும், அதில் இந்தியப் படைகள் மேற் கொண்டுள்ள பங்கைக் குறித்தும் பேசினார்.

பிப்ரவரி 17.—டில்லி சட்ட சபையும் அரசாங்க சபையும் சேர்ந்ததோர் கூட்டத்தில் இன்று மேன்மை தங்கிய வைசிராய் பிரபு ஒரு பிரசங்கம் செய்தார்.

யு. என். ஆர். ஆர். ஏ.-யில் தம்மையும் சேர்த்துக் கொள்ள வேண்டு மென்று இந்தியாவின் சார்பாக யாரும் கோரிக் கொள்ள வில்லை யென்று கல்வி போர்டு தலைவரான மிஸ்டர் பட்லர் காமன்ஸ் சபையில் கூறினார்.

பெண் தொண்டர்கள் தலைமைக் காரியாலயத்தை இன்று மேன்மை தங்கிய வேவல் சீமாட்டியார் டில்லியில் திறந்து வைத்தார்கள்.

பிப்ரவரி 18.—மேன்மை தங்கிய வேவல் பிரபு சென்னை வந்து சேர்ந்தார்.

பிப்ரவரி 20.—செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள இரண்டு கிராமங்களுக்கு மேன்மை தங்கிய வைசிராய் விஜயம் செய்தார்.

பிப்ரவரி 21.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு, பங்கீடுக் காரியாலயத்தையும், ஒரு விறகுக் கடையையும் ஒரு அரிசிக் கடையையும் பார்வையிட்டார்.

பிப்ரவரி 22.—மேன்மை தங்கிய வைசிராய் பிரபு மதுரைக்கு விஜயம் செய்தார்.

ரஷ்யாவும், பின்லந்தும்.

பிப்ரவரி 16.—கனேப் கிடுக்கியில் குண்டுமாரி பெய்து ஜெர்மன் படைகளை அடியோடு அழித்து விடுவதென்று சோவியத் விமானங்கள் தயாராக விருக்கின்றன.

பிப்ரவரி 17.—கனேப் மூலையில் ஜெர்மன் படைகள் அழிக்கப்பட்டன. 52,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள், 11,000 ஜெர்மானியர்கள் கைதிகளாகப் பிடிபட்டார்கள்.

பிப்ரவரி 18.—வட ரஷ்யாவிலுள்ள முக்கியமான ரஷ்ய அரணான ஸ்டரயா ரூசாவையும், ஷிம்ஸ்க் என்னும் முக்கியமானதோர் பட்டணத்தையும் ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

பிப்ரவரி 19.—லெனின்கிராட் போர் முனையில் ப்லையுசா முதலிய 30 இடங்களையும், ஸ்டரயா ரூசாவுக்கு 12 மைல்களுக் கப்பாலுள்ள மகோப்ஸ்கயா, துலாப்லிய உள்ளிட்ட நூறு இடங்களுக்கு அதிகமாகவே ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

ரஷ்யப் படைகளோடு ஒத்துழைக்கும்படி, போலந்தில் தலை மறைவாக வேலை செய்து கொண்டு வரும் ஒரு இயக்கத் தலைவர்களுக்கு போலந்து அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருக்கிறது.

பிப்ரவரி 20.—ஸபோலியெ, உடர்கோஷ், மெட்வெட், முதலிய நூற்றுக் கணக்கான இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

பிப்ரவரி 21.—சோல்ட்சி, கோல்ம், டால்கின்ஸ்டெயோ முதலிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

பிப்ரவரி 22.—க்ரிவாய் ராக்கை நான்கு மாதப் போராட்டத்திற்குப் பிறகு, ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

பின்லாந்துக்கு ரஷ்யர்கள் விதிக்கும் சமாச நிபந்தனைகள் டாக்டர் பாஸிகிவியிடம் கொடுக்கப் பட்டன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

பிப்ரவரி 17.—மார்ஷல் படாக்லியோ தன் மந்திரி சபையை அமைத்து விட்டார்.

பிப்ரவரி 19.—காசினோ மலைக்கு மேற்கே அரண் செய்யப்பட்ட இரண்டு சிகரங்களை 5-ம் படை கைப் பற்றியது. ஆன்சியோ போர் முனையில், கரசெட்டோவுக்குக் கொஞ்ச தூரத்தில் நேச நாட்டுப் படைகள் சற்று பின் வாங்க நேர்ந்தது.

பிப்ரவரி 20.—ஆன்சியோ போர் முனையில் 5-ம் படையின் கை ஓங்கிக் கொண்டு வருகிறது.

பிப்ரவரி 21.—ஆன்சியோ போர் முனையில் ஜெர்மன் அரண்களைத் துளைத்துக் கொண்டு நேச நாட்டு டாங்கிப் படைகள் புகுந்து விட்டன.

தூரக் கிழக்கு நாடுகள்.

பிப்ரவரி 16.—க்ரீன் தீவுகளில் நேச நாட்டுப் படைகள் திரண்டிருக்கின்றன.

இன்று காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன் செய்த பிரசங்கத்தில், யுத்தம் முடிந்த பிறகு ஜப்பானை எந்தவிதமாக நடத்த வேண்டு மென்பது நேச நாடுகளின் கருத்தைப் பொருத்திருக்கிறதென்றும், தூரக் கிழக்கு நாடுகளிலும், ஜப்பானியர் வசப்பட்டிருக்கும் (பழைய) பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலும் அடைபட்டு இருக்கும் 1,600 பிரிட்டிஷ் பொது ஜனங்களை மாற்றிக் கொள்ளுவதாக, ஜப்பானுடன் பேசப் பட்டு வருவது பற்றி வெளியில் பிரஸ்தாபிப்பது கண்டிக்கப்பட வேண்டிய விஷயம் என்றும் குறிப்பிட்டார்.

பிப்ரவரி 17.—கரோலின் தீவுகளில் முக்கியமான ட்ரக் என்னும் பெரிய ஜப்பானிய கப்பற் படைத் தளத்தை, அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

பிப்ரவரி 18.—ட்ரக் தீவில் நேச நாட்டுப் படைகளும் ஜப்பானியப் படைகளும் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன.

கல்லா தீவுகளுக்கு அப்பால் ஒரு ஜப்பானியக் கப்பற் கூட்டத்தை நேச நாட்டு விமானங்கள் சின்னா பின்னப்படுத்தி, பாதிக்கு மேற்பட்ட கப்பல்களை மூழ்கடித்து விட்டன.

பிப்ரவரி 19.—ஜப்பானிய விமான தளமாகிய எஞ்செப்பையும் மார்ஷல் தீவுகளில் எனிவெடிக் அடோலுக்கு வட பகுதியிலுள்ள மற்ற பல தீவுகளையும் அமெரிக்கப் படைகள் கைப்பற்றின.

சமீபத்தில் ஜப்பானை யடுத்துள்ள கடலில் இரண்டு அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் 13 ஜப்பானிய வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்தன.

ஜப்பானிய மந்திரி சபையில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிப்ரவரி 20.—ட்ரக் என்னுமிடத்தில் ஜப்பானியரின் 19 கப்பல்களும், 201 விமானங்களும் நாசமாக்கப்பட்டதாக நேச நாட்டுக் காரியாலய அறிக்கை கூறுகிறது.

பிப்ரவரி 21.—ஜப்பானிய இராணுவத் தலைமையிலும் பல முக்கியமான மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. ஜப்பானிய முதன் மந்திரியே படைத் தலைவர் பதவியையும் ஏற்றுக் கொள்ளுகிறார்.

பிப்ரவரி 22.—மார்ஷல் தீவுகளைச் சேர்ந்த இனிவிடோக் என்னும் தீவை, நேச நாட்டுப் படைகள் கைப்பற்றின.

அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் பிஸ்மார்க் விரிகுடாவில் ஒரு ஜப்பானிய கப்பற் கூட்டத்தை அடியோடு மூழ்கடித்து விட்டதாக ஒரு அறிக்கை கூறுகிறது.

வானொலி : செஞ்சிலுவைப் பிரசங்கம்.

சென்னை.—பிப்ரவரி மாதம் 29-ம் தேதி மாலை 7-45-க்கு 'செஞ்சிலுவை ரகங்கள்' என்பது பற்றிய பேச்சு.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.